உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-ங௫] ஈசுவரஹூ மாசிமீ [பகுதி-ச.

Vol. 35. February – March 1938. No. 4.

## கம்பராமாயணசாரம்.

[எ௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

24 தீர்வரு [1]மின்ன றம்மைச் செய்யினுஞ் செய்ய சிந்தைப்[2]
பேரரு ளாளர்[3] தத்தஞ் செய்கையிற்[4] பிழையா ரன்றே
கார்வரை நிறுவித் தன்னைக் கனலெழக் கடைதல் கண்டும்,
ஆர்கலி யமர ருய்ய அமிழ்துபண் டளித்த தன்றே.[5]

கொண்டுகூட்டு: கார்வரை நிறுவித் தன்னைக் கனல் எழக் கடைதல் கண்டும், ஆர்கலி, அமரர் உய்ய, அமுது பண்டு அளித்தது. (அதுபோல,) செய்யசிந்தைப் பேரறிவாளர், தம்மைத் தீர்வு அரும் இன்னல் செய்யினும், தத்தம் செய்கையிற் பிழையார்.

பொருள். '(தேவர்கள் தன்னைக் கடைகயிறாக்கித் தான் நோவுறும்படி கடையப்பட்ட வாசுகிப்பாம்பு விடத்தைக் கொடுத்தது போலத் தீயோர் தம்மை வருத்தினால், தீமை பயப்பார். அதற்கு மாறாக,) மந்தரமலையை (மத்தாக) நட்டுத் தீப்பொறி பிறக்கும்படி தன்னைக் கடைதலைக் கண்டும் பாற்கடல் (தன்னைக் கலக்கி வருத்திய) தேவர்கள் (மரணத்தினின்று தப்பிச் சிரஞ்சீவிகளாக) உயிர் வாழும்படி அவர்களுக்கு அமுதத்தை அளித்தது. (அதுபோல) நல்லோர், தமக்கு (யாரேனும்) துன்பஞ்செய்தாலும், (அவருக்கும்)

*

விபீடணன், மெய்ம்மயிர்சிலிர்க்கக் கண்கள் ஆநந்தக்கண்ணீர் சொரிய நெஞ்சம் நெக்குருக நோக்கி, 'இந்த மூர்த்தி, செங்கண் படைத்த அஞ்சனமலையோ! கமலம்பூத்த காளமேகமோ! சாட்சாத் மகாவிட்டுணுதானோ! அருள்சுரந்து நீதிவழங்கும் அறக்கடவுளேயோ! அக்கடவுள் நிறம் வெண்மையென்றன்றோ கேட்டிருக்கின்றேன், கரிதாயிருக்கின்றதே! அரும்பெருந்தவஞ்செய்தோர்க்கும் அகற்றுதற்கரிய பிறவிப்பெருநோய் தீர்க்கும் மருந்தாயுள்ளவனும் பரதாழ்வான் தமயனும் பிரமதேவன் தந்தையுமான எம்பெருமானை யான் வணங்கும்படி என் தமையன் எனக்குச் செய்த உதவியை என்னென்பேன்!' என்றெண்ணிச் சிரத்தின்மேற் கூப்பிய காத்தினனாய், இராமன் கருணையோடு தன்னை நோக்குந்தோறும் குனிந்து கும்பிட்டுக்கொண்டுசென்று, தரையில்விழுந்து சாட்டாங்கமாக வணங்கினான்.

இராமன் விபீடணனுக்கு இருக்கை ஈதல்.

பிறவித்துன்பம் முழுதும் அற ஒழிந்ததென்னும் பேருவகை வெளிப்பட்டு விளங்கும் விழிகள் பொழியும் இன்பக்கண்ணீரினால் சேறாகிய மண்மீது மார்புபொருந்த வணங்கின விபீடணனை அருளினால் (மானசமாக) வாரியெடுத்துத் தழுவினானெனத் தோன்றி 'எழுந்து இங்கே இருப்பாயாக' என்று கைநீட்டிக்காட்டி யிருக்கையீந்தான்.]

இராமன் விபீடணனுக்கு இலங்கையரசை ஈதல்.

25 ஆழியா னவனை நோக்கி யருள்சுரந் துவகை கூர்ந்தே[1]
எழினோ டேழாய் நின்ற வுலகுமென் பெயரு மெந்நாள்
வாழுநா ளன்று காறும்[2] வாளெயிற்[3] றரக்கர் வைகும்[4]
தாழ்கட லிலங்கைச் செல்வ நின்னதே[5] தந்தே னென்றான்.

கொண்டுகூட்டு: இராமன் அருள்சுரந்து அவனை (விபீடணனை) நோக்கி உவகை கூர்ந்து 'எழினோடு ஏழாய்நின்ற உலகும் என்பெயரும் எந்நாள் வாழும் நாள், அன்றுகாறும் வாள் எயிற்று அரக்கர் வைகும் தாழ் கடல் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்' என்றான்.

பொருள்: இராமன், அருள்சுரந்து விபீடணனைநோக்கி மகிழ்ச்சி யிருந்து (கூறுவானாகி) 'ஈரேழுலகும் என்பேரும், என்றுவரை யிருக்குமோ அன்றுவரையும், இலங்கையின் (அரசச்) செல்வம் உன்னுடையதேயாம் கொடுத்தேன்' என்றான்.

ஆழி - சக்கரம். ஆழியான் - சக்கராயுதத்தையுடைய விட்டுணுவின் அவதாரமான இராமன். அன்றுகாறும் - அந்நாள்வரையும். வாள் - கூர்மை. (தமிழகராதி). வாள் எயிறு அரக்கர் - கூர்மையான பற்களையுடைய இராக்க தர். வைகுதல் - தங்குதல்.

விபீடணன் சிரஞ்சீவியாயிருந்தாலன்றி, இலங்காதிபத்யம் உலகுள்ளளவும் அவனுடையதாயிருத்தலாகாதாதலால், 'உல குள்ளவரையும் இலங்கைச்செல்வம் உன்னதே கொடுத்தேன்' என்ற தில், 'சிரஞ்சீவியாயிருப்பாய்' என்ற வாழ்த்து, கூறாமலே கூறப் பட்டதாகக்கொள்ளும்படி கூறிய கவிசமற்காரம் கண்டு களிக்கத் தக்கது.

'இராமபிரான் இவ்வாறே (-இலங்கையைச் செயிக்குமுன் விபீடணனுக்குக் கொடுத்ததுபோலவே) வானரராச்சியத்தைச் சுக்கிரீவனுக்கு முந்துற அளித்தது, இங்கு நோக்கத்தக்கது. தொல் காப்பியத்தில் வேற்றோன்மதிலை முற்றுகைசெய்கையும் அதனைப் பாதுகாத்தலுமாகிய உழிஞைத்திணையின் துறைகளை விவரிக்கு மிடத்துக் "கொள்ளார்தேஎங் குறித்த கொற்றமும்" என்று கூறிய இடத்திற்குப் 'பகைவர்நாட்டினைத் தான் கொள்வதற்குமுன்னே யும் கொண்டாற்போல வேண்டியோர்க்குக் கொடுத்தலைக் குறித்த வெற்றியும்' என்று பதப்பொருள்கூறி, 'இராமன் இலங்கைகொள் வதன்முன் விபீடணற்குக் கொடுத்த துறையும் அது' என்று விசேடவுரை கூறியது அறியத்தக்கது.' வை. மு. கோ.

பாடபேதம்: [1] ஆண்ட, கூர. [2] வாழுமந் நாள்களெல்லாம். [3] வளை எயிற்று. [4] வேட்கும். [5] இன்னதே.

இராமன் பாதுகையைக் கிரீடமாகச் சூட்டும்படி விபீடணன் வேண்டல்.

[விபீடணன் தென்னிலங்கைச்செல்வமும் தீர்க்காயுட்செல்வ மும் ஒருங்கடைய உதவிய பெருங்கொடைக்கு உள்ளார்ந்த நன்றி யுணர்வுடையனாய், 'அடியேன் பிறரெவரும் பெறாத பெறலரும்

பேறு பெற்றேன்' என்று மீளவும் விழுந்து வணங்கி யெழுந்து நின்றான். 'அவனுக்கு முடிசூட்டுவாயாக' என்று இராமன் இலக்குமணனை நோக்கிச் சொன்னான். அப்போது, விபீடணன் 'ஐயனே! பரதாழ்வானுக்குப் பாலித்த பாதுகாமகுடத்தை அடியேனுக்கும் பாலித்தருளவேண்டும்' என்று பணிந்து வேண்டினான்.]

இராமன், தன்னைத் தாசனாகக்கொள்ளவேண்டிய விபீடணனைத் தம்பியாகக்கொள்ளல்.

26 குகனொடு மைவ ரானே முன்புபின் குன்று சூழ்வான்
மகனொடு மறுவ ரானே மேம்முழை[1] யன்பின் வந்த
அகனமர் காத லைய நின்னொடு மேழுவ ரானேம்
புகலருங் கானந் தந்து புதல்வராற்[2] போலிந்தான் உந்தை.

கொண்டுகூட்டு: 'எம் உழை அன்பின் வந்த அகன் அமர் காதல் ஐய! முன்பு, குகனொடும் ஐவர் ஆனேம்; பின் குன்றுசூழ்வான்மகனொடும் அறுவர் ஆனேம்; நின்னொடும் எழுவர் ஆனேம்: உந்தை, (எனக்குப்) புகல் அரும் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான்.

பொருள்: முன்பு (நாட்டில் சகோதரர் நால்வராயிருந்த நாங்கள், காட்டில் வந்து,) குகனோடுசேர்ந்து ஐவரானோம்; பின்பு சூரியகுமாரனான சுக்கிரீவனோடுசேர்ந்து அறுவரானேம்; (இப்போது) உன்னுடன் சேர்ந்து எழுவரானேம்: எனக்குக் காடு தந்ததனால், உன் தந்தை, (சிறந்த புத்திரசம்பத்துடையவனாய் மிகுந்த) குமாரர்களால் (அலங்கரிக்கப்பெற்று) விளங்குகின்றான்.

குன்றுசூழ்வான்மகன் - (மேருமலையைத் தினந்தோறும்) வலம்வருவானான சூரியகுமாரனான சுக்கிரீவன். எம் உழை - எங்களிடம். அகன் அமர் காதல் - மனத்துப் பொருந்திய விருப்பம் - நெஞ்சார்ந்த நேயம். புகல் அரும் கானம் - புகுதற்கரிய காடு. உந்தை - உன் தந்தை.

நாட்டிலே நான்கு சகோதரராயிருந்தவர், காட்டிலே குகனைச் சந்தித்து அவனோடு சேர்ந்து ஐந்துசகோதரரானாரென்றும், மலையிலே சுக்கிரீவனைத்தேடிக் கண்டு அவனோடுசேர்ந்து ஆறுசகோதரரானாரென்றும், கடற்கரையிலே தங்களைத் தேடிவந்தடைந்த விபீடணனோடுசேர்ந்து எழுசகோதரரானாரென்றும்,—இவ்வாறாக, சகோதரர், நாட்டில் நால்வரும் நாட்டுக்குவெளியே காடு மலை

கடலான மூன்றிடங்களில் மூவருமாக எழுவரானரென்றும்,— மூவரிலே முதலாவான் காட்டில் தற்செயலாகச் சந்தித்தும் இரண்டாவான் மலையிற் சென்று தேடப்பெற்றும் மூன்றாவான் கடலில் தேடிவந்தும் சகோதரரானரென்றும் இனிது விரித்துரைத்தற்கு இப்பாட்டு இடங்கொடுத்துநிற்றல் காண்க.

இராமன், 'விபீடண! நீ என் சகோதரனை' என்ற இடத்துத் தன் தந்தையைப்பற்றிக் கூறநேர்ந்தபோது, அவனை இயல்பாக என்தந்தையென்னமல், அடுத்தபடியாக (விபீடணனைப் பொதுவாக உளப்படுத்தி) நம் தந்தையென்னமல், எல்லாவற்றுக்கும் உயர்ந்தபடியாக (அவனைச் சிறப்பாகத் தனிப்படுத்தி) உன் தந்தையென்று நாகரிகமும் சாதுரியமுமாக நவின்றனென்றதனல், கம்பர், தம் கதாநாயகன் உயர்வொப்பற்ற மனநன்மையோடு அத்தியந்த மதிநுண்மையுமுடையானெனக் கூறிய கவிசமற்காரம் ஊன்றி நோக்கி உவத்தற்குரியது.

பாடபேதம்: [1] எம்முனே. [2] புதல்வரிற், புதல்வராய்ப்.

### இலக்குமண சுக்கிரீவர், இராமன் பாதுகையைச் சூடிய விபீடணனை விமானமேற்றிப் படைவீட்டை வலஞ்செய்வித்தல்.

[மேற்கூறியவாறு இராமனல் உறவுபாராட்டப்பெற்ற விபீடணன் உள்ளார்ந்த நன்றியுணர்ச்சியுடையனய், இராமனை நோக்கி, 'பேரருளாளப்பெருமானே! "உன் திருவடித் தொண்டருள் ஒருவனகத் திருவுள்ளம்பற்றியருளல்வேண்டும்" என்று சரணம் அடைந்த தமியேனை உன்னுடன் பிறந்த அருமைத்தம்பியரோடு தம்பியாக ஏற்றுக்கொண்ட பேரன்பும் பெருந்தகைமையும் இருந்தவாறு என்னே!' என்று இராமன் *திருவடிநிலையை எடுத்துச் சிரமீது தரித்துக்கொண்டான். இரத்தினமிழைத்த செம்பொற் பாதுகாமகுடதாரியாய்ச் செஞ்ஞாயிறு திகழப்பெற்ற கரிய உதயகிரியை ஒத்து விளங்கிய விபீடணனைக் கண்டு எல்லாருங் களிகூர்ந்தார்கள். பக்கத்தே முழங்கிக்கொண்டிருந்த கடல் வழக்கமாகச் செய்துகொண்டிருந்த முழக்கத்துக்கு அதிகமான முழக்கத்தைச்செய்தது. மேலே, மேகம் முழங்கியது. கீழே,

* திருவடிநிலை - பாதகுறடு.

சங்கம் முரசம் முதலிய மங்கலவாத்தியங்கள் முழங்கின. வானரர் பொன்மாரியும் வானவர் பூமாரியும் பொழிந்தார்கள். இராமன், இலக்குமண சுக்கிரீவரை நோக்கி, 'இவன் நம்மோடு ஐக்கியமாகி இலங்கைக்கு அரசனானென்பதை எல்லாரும் அறியும்படி இவனை விமானமீதேற்றி இராசமரியாதையுடன் சேனை சூழ்ந்து செல்லப் படைவீட்டை வலம்வரச்செய்யுங்கள்' என்ன, அவர்கள் அவ்வாறு செய்தார்கள்.

தேடுவார் தேட நின்ற சேவடி தானுந் தேடி
நாடுவான் அன்று கண்ட நான்முகன் கழீஇய நன்னீர்
ஆடுவார் பாவம் ஐந்தும் நீங்கிமேல் அமரர் ஆவார்
சூடுவார் எய்தும் தன்மை சொல்லுவார் யாவர் சொல்வீர்.*

[சேவடி - (திருமாலின்) சிவந்த பாதங்களை. கழீஇய நல் நீர் - கழுவிய கங்கைநீர். அன்று - திரிவிக்கிரமாவதாரகாலத்தில். ஆடுவார் - குளிப்பார்.]

என்றவாறு, கங்கையாறு எந்த மூர்த்தி பாதங்களைக் கழுவு தற்குப் பயன்படுத்தப்பட்டபோது சிறிதுநேரம் தீண்டப்பெற்ற மகிமையினால் தன்பால்வந்து நீராடுவார்பாவங்களெல்லாவற்றை யும் போக்குதற்கு எக்காலமும் வல்லதாயிருக்கின்றதோ, அந்த மூர்த்திபாதங்களை நெடுங்காலம் தாங்கியிருந்ததனால் அக்கங்கை யினும் மிக்க மகத்துவமுடைய பாதுகையைச் சூடிய விபீடணன் அடைந்த பேறு பேசமுடியாதபெருமையை உடையது. மகரிஷி கள், யோகீசுரர்கள், தத்துவஞானிகள், உத்தமபத்தர்களான பெரியோரெல்லோரும் 'விபீடணன் பெற்றபேறு வேறு யாவர் பெற்றார்!' என்று வியந்தார்கள். அவன் படைவீட்டை வலஞ் செய்விக்கப்பெற்றபின் வந்து வணங்கியபோது, இராமன், அவ னுக்கு அப்படைவீட்டில் ஏற்ற இருப்பிடம் அளித்து இனிதிருக் கச்செய்தான்.]

விபீடணன் அடைக்கலப்படலம் முற்றியது.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

* இப்படலம் கருரு-ஆம் பாட்டு.

# பழநி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் சரிதம்.

[௭௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## 13 காவலர் பொன்னுச்சாமித்தேவர் கவிராயர் கவிகட்குருகியதும் கவிராயர்க்குக் கவிச்சிங்கப்பெயரளித்ததும்.

கலாவிநோதராகிய ஸ்ரீபொன்னுச்சாமித்தேவரவர்கள் அம் மட்டின் அமையாது மேலும் கவிராயரவர்களுடைய தகுதியை, நன்ருகப் புலப்படுத்தநினைந்து, 'புலவீர்! அண்ணுமலை அடிகளாகிய ஸ்ரீஅருணகிரிநாதர், முருகன்திருவருள்பெற்றுத் திருவாய்மலர்ந்த திருப்புகழ்ப்பாசுரத்திலுள்ள "முத்தைத்தரு" என்னும் முதலடி யுடைய பாடலுள் 'முத்தை' என்பது தொடங்கி, 'ஓது' என்பது வரை முடிகிற பகுதிகள் ஓர் வெண்பாவில் அமையப் பாடுதிர்' என்றனர். கவிராயர், அக்கணமே பிரபுவைப்பார்த்து, 'வரமுதவிக் காக்கு மனமே வெண்சோதி பரவிய என்ற சொற்ருெடரை முதலிற் சேர்த்துக்கொள்ளுங்கள், அது வெண்பாவாகவமைந்திருக்கும்' என்று கூறினர். அவ்வெண்பா,

> வரமுதவிக் காக்கு மனமேவெண் சோதி
> பரவியமுத் தைத்தரு பத்தித்—திருநகையத்
> திக்கிறை சத்திச் சரவணமுத் திக்கொருவித்
> துக்குருப ரன்னெனவோ து.

என்பதாம்.

அதுகேட்ட தேவரவர்கள் தாம் எண்ணியவாறே வெண்பா அருமைப்படமுடிந்திருப்பதற்கு அகமிகமகிழ்ந்தனராகி மேலும்,

கவிராயரை நோக்கிக் 'காசியென்னும் ஒருசொல்லே ஒரு வெண்பாவில் நான்கிடத்தும், மற்றொரு வெண்பாவில் ஆறிடத்தும்பயின்று வெவ்வேறுபொருள்பயந்து முருகன் விஷயமான துதியாகவும், வேறொருவெண்பாவில் பத்திடத்திலும் பிறிதொருவெண்பாவில் பதினொன்கிடத்திலும் பயின்று வெவ்வேறுபொருள்பயந்து சிவபெருமான்விஷயமான தோத்திரமாகவும் அமையப் பாடித்தருக' என, நாவலரவர்கள் சிறிதும் தாமதியாது அவர் விரும்பியவாறே பாடிமுடித்தனர். அச்செய்யுட்கள்,—

நான்கு காசி வரப் பாடியது.

"இக்கா சினிப்பா விலங்கா சினித்தேவர்
தொக்காசி கூறித் தொழக் கருணை—மிக்காளுங்
கந்தா! முருகா! சிகாவளத்தின் மீதேறி
வந்தா தரித்தருளு வாய்.

ஆறு காசி வரப் பாடியது.

துங்காசி வந்த சுமுகாசி லோதிவள்ளி
பங்காசி கிக்குதிரைப் பாகாசித்—தங்காசி
னிச்சைதனி லேங்கா தெனையாள் குகாசிறந்த
செச்சைவடி வேலா தினம்.

பத்துக் காசி வரப் பாடியது.

வாகாசி ராகாசி வாகாசி ஞகாசித்
தாகாசி யோகாசி தாகாசி—யேய்காசி
வண்குழலி பாகாசி வந்தவுத்துங் காசிறிது
தண்கருணை கூர்சந்த தம்.

பதினொன்கு காசி வரப் பாடியது.

காசினிபுக் காசிவருங் காசிவணீக் காசிறியேற்
காசிநதே காசினகா காசிவைபா—காசிலேபோற்
காசிவண்வா காசிவதுங் காசிவமோங் காசிவழாக்
காசிவர்தாழ் காசிவளா கா.

என்பனவாம்.

தமிழிலுள்ள சில தனிச்சொற்களுக்கு மிகுதியான ஆ
துண்டு. அந்தச் சொற்களைப் பொறுக்கி இடத்திற்கே
வைத்துச் சிறப்பிப்பதிலேயுளது சமர்த்து. சாகாதவரம்பெ
விளங்கும் கவிகளில் இச் சொற்பிரயோகங்களைக் காணலாம்.

புலவர்களுக்கு வெண்பாப்பாடுதல் மிகவும் அரிது. இத்தன
சிரமசாத்தியமான வெண்பாக்களை மாம்பழப்பாவலர் மிகவும்
தாக ஒருசொல் பலவிடத்தும் விரவிவரவும் விரும்பிய பெ
ளமையவும் குறித்த கால அளவிற் பாடிச் 'சமர்த்தர்' எனப்பெ
சிறந்து திகழ்ந்தனர்.

ஸ்ரீபொன்னுஸாமித்தேவரவர்களும் அவர் சகோதரர்
முத்துராமலிங்கசேதுபதிமன்னரவர்களும் இங்ஙனம் புல
யாலும் பொருக்கெனக் கவிபாடும் புதுமையாலும் அனுயாசம
பொருள்சிறக்க அழகுமிகப் பாடி அவையினர்களையும் தங்களை
அதிசயிக்குமாறு செய்த மாம்பழப்பாவலருடைய அரிய திறல
கும் தெய்வப்புலமைக்கும் அகமிகமகிழ்ந்தனர். சேதுபதி
தமிழின் சுவையையும், அதன் அளப்பரிய ஆற்றலையும், அது க
ரின் பெருமையையும் உள்ளபடியே அறிந்து மகிழும்திறத்தின
லால் அவ்விருவரும் கவிராயரை மேலானவகையிற் சிறப்பிப்பத
யாதுசெய்வது என ஆலோசித்துக்கொண்டிருந்தனர்.

தமிழறிவிலும் புலவர்கள் தகுதியறிந்து சன்மானிப்பதி
மிக்குயர்ந்த சேதுஸம்ஸ்தானாதிபதிகளும், பலவகைப் பாத்து
களை அவற்றின் பண்பறிந்து சொல்லழகும் பொருள்வனப
பொருந்தப் பழகுதமிழில் எளிய நடையில் ஆற்றொழுக்
விரைந்துபாடும் மாம்பழப்பாவலரும் நடாத்தும் கலாவினோ
தைக் கண்டு களிப்பதற்குச் சேதுவேந்தர்பேரவையிற் கூடியி
தமிழ்ப்புலவர்களும், வடமொழிவாணர்களும், சிற்பம், சங்கீதம்,
யம், சோதிடம் முதலிய கலைவல்லார்களும், பொன்னுச்சாமித்
ருடைய மிகவும் அரிய பலவகைவினாக்களுக்கும் அவர் ம

ம்மிதங்கொள்ளும்படி விடையளித்த மாம்பழப்பாவலரது அற்
ப் புலமையைப் பெரிதும் பாராட்டி அவர் திறத்து ஸம்ஸ்தாளுதி
திகள் அருள்சுரந்து அளிக்கும் அரும்பெரும்பரிசுகள் இவை
ன்பதை அறிந்துகொள்ள ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்
ருந்தனர்.

இங்ஙனம் ஸேதுஸம்ஸ்தாநாதிபதிகளும், அவையிற்கூடிய
ரும்பெரும் புலவர்களும், தமது தமிழ்ப்புலமையைப் பாராட்டு
தையறிந்த மாம்பழப்புலவர், ஸ்ரீபொன்னுச்சாமித்தேவர் தமக்
ச்செய்யவிருக்கும் உயர்ந்த வெகுமதி யாதாயிருக்குமென்பதை
திர்நோக்கிக்கொண்டிருந்தார்.

அஞ்ஞான்று மாட்சிமிக்க ஸ்ரீபொன்னுச்சாமித்தேவரவர்கள்
க்கார் ஒருவரிடம், தம் ஸம்ஸ்தானத்தை நாடிவந்த தமிழ்ப்புல
ர்களில் மாம்பழப்பாவலரைப்போல் ஒரு பெரும்புலவர் வந்ததே
ல்லையென்றும், இவரே யாவரினும் மேலானவரென்றும், இவரது
லமையும், விநயமும், சாதுரியமும், சாகஸமும் அற்புதமானவை
ன்றும், அவை தமது நெஞ்சை உருக்கி அன்பைப் பெருக்கி
ர்வத்தை மிகும்படிசெய்தனவென்றும் அதனால் தம்மனம் முழு
ம் பாவலர்வசமே படிந்துவிட்டதென்றும் கூறியது உண்டு. இவ்
ரெழுந்த மகிழ்ச்சியின்மிகுதியால் தேவரவர்கள் தமது பொன்
சனத்தினின்றும் பொருக்கென்றெழுந்து கவிராயர் வீற்றிருந்த
டத்தையடைந்து அவரது வலத்திருக்கரத்தைத் தமது
லத்திருக்கரத்தால்பற்றி நன்றாய்க் *குலுக்கிச் 'சபாஷ்' என்று
றி, மேலும் 'புலவர்பெரும! நுமது நூற்புலமை நுவலுதற்கரிது.
ழகும் சுவையும் ஒருங்கே சிறக்கக் கவிபாடும் திறமையும்
யக்கத்தக்கதே. மற்றும் தமிழ்ப்புலமைக்குரிய நலன்களெல்லாம்
ன்கு அமையப்பெற்றுக் கலைமடந்தையின் பீடமென விளங்கும்
ங்கட்கு இப்பேரவையில் "கவிச்சிங்கம்" என்ற விருதுப்பெயரை

---

* கைகுலுக்கித் தமது சந்தோஷத்தை அறிவிக்கும்வழக்கம் ஆங்கில
ாகரிகத்தைப் பின்பற்றியது.

நாம் மிக்க மகிழ்ச்சியுடன் சூட்டுகின்றோம். இத்திருப்பெயர், த கட்குத் தமிழகத்தில் என்றும் நின்றுநிலவுவதாக' என்று புகன். அப்பெயரைப் பாவலர்க்களித்துப் பாராட்டினர்.

இங்ஙனம் தம்மைப்பற்றிப் பலபடமொழிந்து பாராட்டி தமக்குக் கவிச்சிங்கப்பெயர்சூட்டிய புரவலரும், புலவர்பெருமா மாகிய ஸ்ரீபொன்னுச்சாமித்தேவரவர்கள்மீது மாம்பழப்புலவ அவர் தம்மிடத்துக் காட்டிய பேரன்புக்குப் பெரிதும் மகிழ் இனியதொரு கவிபாடினர். அது:—

அவனிபுகழுனது திரு வடிமலரி
னெழுதுகளால் அன்று நீங்காப்
பவமதகன் றொருகரிய பாறையும்பெண்
ணுருமெனிற் பாரா வாரந்
துவளவமு தெடுத்தினிய சுரர்க்கருணின்
திருக்கரத்தாற் றொடப்பெற் றேற்குக்
கவலையினி யுளதாமோ! காமர்பொன்னுச்
சாமியென்னுங் கருணை மாலே.

என்பது:

இச் செய்யுளில் திருப்பாற்கடலைக் கடைந்து அமுதத்த வானவர்க்கு வழங்கிய செங்கண்மாலின் திருவிளையாட்டை விவ கும் கதையையும், ஸ்ரீராமபிரான் தன் திருத்தம்பி இலக்குவனு முனிவர்பின்னே மிதிலைக்குச்சென்றுகொண்டிருக்கும்போது வழ யுள்ள கௌதமர் ஆச்சிரமத்தின் அருகே கிடந்த ஒரு கல்லின் அவரது திருவடித்துகள்பட அது அக்கல்லுருநீங்கிப் பெ ணுருப்பெற்று அகலிகையான கதையையும் மாம்பழக்கவிச்சி நாவலர், தம் அபிமானப்பிரபுவுக்குப் பொருந்தும்படி கற் செய்து பாடியிருப்பது தமிழன்பர்கள் சுவைத்து இன்புற குரியது.

திருமாலின் அம்சம் திருவுடையமன்னருக்கும் உண்டென் நூன்மரபு. அதுபற்றியே திருமாலின்செய்கைகளைத் திருவு மன்னர்மீதேற்றிக்கூறினர்.

இதன்பிறகு பாட்டின் தன்மையை, நன்கறிந்தவரும், செந் ழ்வளர்த்த பாண்டியர்களைப்போலவே, சேதுபதிகளாகிய முன்னோர்களும் பைந்தமிழையும், அதனைப் பிழையறக்கற்ற வாணர்களையும் பாதுகாத்ததறிந்து தாமும் அவ்வாறு பாது த்துவருபவருமாகிய ஸ்ரீபொன்னுச்சாமித்தேவரவர்கள், கவிராய ர்கள்தகுதிக்கேற்ப வரிசையளிக்கநினைந்து, தமது நிதியறையி ன்று பொன்முடிப்புக்களையும் உயர்ந்த பொற்சரிகைப் பீதாம்பரங் ாயும் கொணரச்செய்து, முதலிற் பாட்டிற் சிறந்த பாவாணர்க்குப் சளிப்பதற்குமுன், சந்தனம்பூசச்செய்து பின்னரே பரிசளிக்கும் ன்டைமுறைப்படி விலையேறப்பெற்றதும் மணமிக்கதுமான வைச்சந்தனத்தைத் தம் பணியாளரைக்கொண்டு கவிராயருக் ப் பூசுவித்துக் கவிராயர்மேனியினின்றும் களபம் புலருமுன், வர் திருவாக்கினின்றும் ஓர் இன்கவியைச் செவிகளிப்பக்கேட்க னந்து கவிச்சிங்கத்தைநோக்கி, 'சந்தனம்' என்ற சொல் எழு த்தில் விரவிவருமாறு ஒருகவி இசைக்கும்படி கேட்டுக் ாண்டனர். அக்கணமே மாம்பழப்பாவலர் அகத்துறையில் சிருங் ரசத்தில் தலைவனுக்குப் பாங்கி யெடுத்துக்கூறும் முறையில் னியதொரு கவியையிசைத்தனர். அக்கவி—

கட்டளைக்கலிப்பா.

"கந்தச் சந்தன மெய்யிற் பொருக்கெழக்
கனவ சந்தனம் பாலுன்றன் மோகமே
முந்தச் சந்தன மேவிச்செந் தேனும
முதுங்க சந்தன வென்றே மயங்கினள்
இந்தச் சந்தன சுந்தர எம்புனைக்
தெழுகச் சந்தன மின்னிவட் குச்சுகந்
தந்தச் சந்தன தெவ்வமுந் தீர்ந்திடத்
தயவு கூர்பொன்னுச் சாமி நரேந்த்ரனே"

ன்பது.

அந்தமிகும் இக்கவியைச் செவிமடுத்த யாருக்குத்தான் க்தம் பிரமிக்காது? ஆனந்தமெழாது? தேவர்மனத்துள் எழுந்த ண்ணங்கள் அத்தனையும் இப்பாட்டிற் பயின்று சொல்லுக்கேற்ற

பொருள்வனப்புடன் அமைந்து கற்போர் கேட்போர் விம்மிதங் கொள்ளுமாறுசெய்தது.

தாம் விரும்பியவாறு பாடிய புலவரின் பாவமுதைப் பருகிய காவலர் பொன்னுச்சாமித்தேவர் பரவசமடைந்து, தம் எதிரிலிருந்த பரிசுப்பொருள்களை, மலர்ந்தமுகத்துடன் இன்னுரைகூறி உப சரித்துப் புலவர்க்குத் தமதுகையாலேயே அளித்தனர். அவற்றை வணக்கத்துடன் இருகையாலும் ஏற்று மகிழ்ச்சிமிகுந்த மாம்பழக் கவி தம் நன்றியறிதலை இனியதொருகவிமூலம் அறிவித்தனர். அக்கவி—

"கங்கங் குலவு கதிர்வேலான் கனக மேரு கருணைமுகில்
பொங்கம் பெறுதென் புதுவைவளர் பொன்னுச் சாமி பூபனெனக்
கெங்குந் திறல்கூர் 'கவிச்சிங்கம்' எனவோர் பெயரிட் டெழில்வளமை
தங்கும் புகழ்மே லாங்கலையுந் தந்தே யெனையா தரித்தனனே."

என்பது.

"பாவுக் கிசையும் பெயரே புனைந்துமெய்ப் பாவலர்தம்
நாவுக் கிசையும் பெரும்புகழான்"

என்று புலவர்கள் பாராட்டிப்புகழும் ஸ்ரீபொன்னுச்சாமித் தேவரவர்கள், தம் கவிகளை மெச்சிச் 'சபாஷ்' எனக்கூறித் தமது கைகுலுக்கித் தமக்குக் "கவிச்சிங்கம்" என்ற புகழ்ப்பெயரைச் சூட்டிப் பொற்சரிகைப் பீதாம்பரங்களை வெகுமதியாகக் கொடுத்து உபசரித்த அருமை பெருமைகளைப் பாராட்டி மாம்பழக்கவிச் சிங்கநாவலர் தாம் செல்வர்களுக்கும் ஜமீந்தார்களுக்கும் வரைந்த சீட்டுக்கவிகளில் விவரித்திருப்பது, அச் சம்பவங்கள் உண்மை நிகழ்ச்சியென்பதை நமக்கு நிரூபித்துக்காட்டுகின்றன. அச்சீட்டுக் கவிகளின் சொற்றொடர்களிற் சிலவற்றைமட்டும் உதாரணமாக இதன்கீழ்த் தருகின்றோம். அவை:—

"தளசேது பதிசமஸ் தானபூ ஜிதவித்வ
சாமர்த்திய ரத்னதீபம்"

"சரஸ்வதி விலாஸமுத் தமசேது பதிமெச்சு
சண்டப்ர சண்ட வாக்கி"

"தர்க்ககண் டனகண்ட கோடாலி சேதுபதி
சமுக சம்மான ரத்னம்"

"தளசேது பதிசமஸ் தானமுத லெங்குஞ்
'சபாஷ்' என மதித்த ரத்னம்"

"பகாமுல வியராம நாதபுர துரைசேது
பதிசமஸ் தானத் தினிற்
பாடமுடி யாச்சமஸ் திகளெலா நொடியினிற்
பாடியந்தப் பிரபுவினுற்
பகர்'கவிச் சிங்க'மென் றொருபேர் படைத்து"

"கருதலர்கள் பணிராம நாதபுர சேதுபதி
கண்ய சமுகத்தி னிற்போய்க்
கவிமழை பொழிந்தே கவிச்சிங்க மெனமகிமை
கைக்கொண்ட தொன்று.............."

"தருபழநி நகர்மாம் பழக்கவிச் சிங்கத்
தமிழ்ச்சக்ர வர்த்தி நிருபம்"

"சேதுபதி சமுகமெச் சியமாம் பழக்கவிச்
சிங்கமினி தெழுது நிருபம்"

"தருராம நாதபுர சேதுபதி யாம்பொன்னு
சாமிமக ராசன் மெச்சித்
தந்தவெகு மதியோ கணக்குக் கடங்காது"

"சொற்செறிமுத் தமிழ்வலர்க்குத் துரங்கமணி
சரங்கவிகை துலங்கு தந்தப்
பொற்சிவிகை முதலவருள் புனித! பொன்னுச்
சாமியெனும் புயலே!"

என்பனவாம்.

[தொடரும்.]

சி. கு. நாராயணசாமிமுதலியார்.

ஸாவஸமஹாகவி இயற்றிய

# பிரதிஜ்ஞா யௌகந்தராயணம்.

---

[கூச-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

(ஸாலகனுடன் யௌகந்தராயணன் அரங்கிற் புகுதல்.)

யௌகந்த:—ஸாலக! நீ ஆயத்தமாயிருக்கிருயா?

ஸாலகன்:—ஐய! ஆம்.

யௌகந்த:—நெடுந்தூரம் செல்லவேண்டும்.

ஸாலகன்:—மிகவும் அதிகமான நட்புடன் தங்களுக்கு நான் கீழ்ப்படிகிறேன்.

யௌகந்த:—சந்தோஷம்! அவனே போய்வருவான். அவன் நிறைவேற்றவேண்டிய காரியமோ மிகவும் பெரிது. ஏனெனில்,

ஸ்நிக்³தே⁴ஷு ந்யஸ்ய ஸஜ்ஜாம் க்ருதிம் யது³க்தாம்ஸஸ்ய
ஜ்ஞாத்வா விஜ்ஞாததா ஸத்த்வதாநாம் கு³ணாநாம்।
க்ருதம் ஸாஹாய்யம் யஸ்ய தஸ்ய க்ருதேன
தை³வ ப்ராணோந்யோ ஹ்ருதே வயத்தே வா ॥

எந்தக் காரியத்தைக் கஷ்டப்பட்டு முடிக்கவேண்டுமோ, அது நட்புள்ளவர்களிடம் ஒப்புவிக்கத்தக்கது; நற்குணங்களை எவன் அறிவானே, எவனுடைய திறமை விலைக்குவாங்கப்பட்டதுபோல் நமக்குக் கிடைத்திருக்கிறதோ, அவனுடைய முயற்சியும் தைவத்தால் ஒருகால் நழுவிவிடவுங்கூடும், அல்லது பயன்படவுங்கூடும்.

மகாராஜா நாளை வேணுவனத்திலிருந்து மூன்றுகானகங்கள் கடந்து நாகவனத்துக்குச் செல்லப்போகிறுர். முன்னமே அதற்கு வேண்டியவற்றைச் செய்யவேண்டும்.

ஸாலகன்:—எஜமானரின் எழுத்தே எல்லாம் செய்யவல்லது; உயிர்போன்றது. என்னுற் செய்யப்படும் பணி உடலளவே.

யௌகந்த:—விஜயே!

விஜயை:—[அரங்கிற் புகுந்து] ஐய! இதோ இருக்கிறேன்.

யௌகந்த:—விஜயே! எழுத்தும் காப்புச்சரடும் சீக்கிரமாகக் கொணரப்படட்டும்.

விஜயை:—ஐய! அப்படியே. (வெளிச்செல்லல்)

யௌகந்த:—இந்தவழியை நீ முன்பு பார்த்திருக்கிருயா?

ஸாலகன்:—இல்லை; அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

யௌகந்த:—இதுதான் அறிவாளிகளின் இலக்கணம். காட்டானைகளால் மறைக்கப்பட்டதும் நீலநிறம் பொருந்தியதுமான ஒரு யானையைக்கொண்டு நம் அரசரை வஞ்சிக்கப் பிரத்யோதனன் கருதியிருக்கிருனென்று நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. நம் அரசரின் எண்ணம் பிழைபடாமலிருக்கவேண்டுமே; பிரத்யோதனனுக்கு வத்ஸராஜனிடத்திருந்து அச்சமோ? அவனுடைய படைவலியோ வெளிப்படையானதே. ஏனெனில்,

> வ்ருத்தம் பலம் பஹு ச தஸ்ய ந சைககார்யம்
> ஸம்க்யாதவீரபுருஷம் ச ந சாநுரக்தம் ।
> வ்யாஜம் ததஃ ஸமபிநந்தி யுத்தகாலே
> ஸர்வம் ஹி ஸைந்யமநுராகம்ருதே கலத்ரம் ॥

அவனுடைய படையோ வெளித்தோற்றத்தில் மிகவும் பெரியது; ஆனல் அது ஒரே முயற்சியுடையதன்று: படையில் பல பல வீரர்கள் இருக்கிருர்கள்; ஆனல் அவர்கள் தலைவனிடம் உண்மையான நட்புடையவர்களல்லர். போர்நிகழும்போது கபடமே மேலிடுகிறது. எவ்வளவு பெரிய படையும் உண்மையான நட்பில்லாததாயின் அன்பற்ற மனைவிபோலும்.

விஜயை:—(அரங்கிற் புகுந்து) இதோ எழுத்து; காப்புச்சரடும் வதூக்களின் (மருகியர்) கைகளிலிருந்து விரைந்து ஆக்கப்படுகிறதென்று நம் அரசருடைய அன்னையார் சொல்லுகிருர்கள்.

யௌகந்த:—விஜயே! "வதூக்கள் எல்லோருடைய கைகளிலு மிருந்தாவது அல்லது ஒருவரிடமிருந்தாவது காப்புச்சரடு கொடுக்கப்பெறட்டும்" என்று அன்னையவர்களிடம் உரைப்பாயாக.

விஜயை:—ஐய! அப்படியே. (வெளிச்செல்லல்)

நிர்முண்டகன்:—(அரங்கிற் புகுந்து) ஐய! சௌக்கியமா?

யௌகந்த:—நிர்முண்டகனு?

நிர்முண்டகன்:—இதோ, அரசரின் பாதமூலங்களிலிருந்து ஹம்ஸகர் ஏதோ செய்தி கொணர்ந்திருக்கிறார்.

யௌகந்த:—ஹம்ஸகர் ஏன் தனிமையாக வந்திருக்கிறார்? ஸாலக! சற்றுநேரம் இங்கே இருப்பாயாக. சற்றுநேரம் கழித்துக் களைப்பாறினபிறகு போகலாம்.

ஸாலகன்:—ஐய! அப்படியே. (வெளிச்செலல்.)

யௌகந்த:—(நிர்முண்டகனைநோக்கி) ஹம்ஸகரை அழைத்துவா.

நிர்முண்டகன்:—ஐய! அப்படியே; (வெளிச்செலல்.)

யௌகந்த:—அரசரைவிட்டு எப்போதும் பிரியாதவரான ஹம்ஸ்கர்மட்டும் தனியே வந்திருப்பதனால் என்மனம் கலக்கமடைகிறது. ஏனெனில்,

𑌯𑌥𑌾 𑌨𑌰𑌸𑍍𑌯𑌾𑌕𑍁𑌲𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌸𑍍𑌯
𑌗𑌤𑍍𑌵𑌾 𑌨𑍃𑌦𑍇𑌶𑌂 𑌗𑍃𑌹𑌮𑌾𑌗𑌤𑌸𑍍𑌯 ।
𑌤𑌥𑌾 𑌹𑌿 𑌮𑍇 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌶𑌙𑍍𑌕𑌾
𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑌿𑌨𑍍𑌨𑍁 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌵𑌾 ‖

சுற்றத்தார் வருத்தமடைந்திருக்கும்போது பிறநாட்டுக்குச் சென்று திரும்பிவருமவனுக்கு எவ்வாறு புந்தியிற் கலக்கம் உண்டாகும்மோ, அவ்வாறு இப்பொழுது விரும்பியதையோ அல்லது மனதுக்குவேண்டாத செய்தியையோ நான் கேட்கப்போகிறேனே என்று என்மனதில் ஐயம் தோன்றுகிறது.

[ஹம்ஸகனும் நிர்முண்டகனும் அரங்கிற் புகுதல்.]

நிர்முண்டகன்:—ஐய! (இங்கே) வரவேண்டும், வரவேண்டும்.

ஹம்ஸகன்:—ஆரியர் எங்கே? எங்கே?

நிர்முண்டகன்:—ஆரியர் இதோ இருக்கிறார், இவரிடம் போக லாம்.

ஹம்ஸகன்:—ஆரியர் சௌக்கியமா?

யௌகந்த:-ஹம்ஸகரே! அரசர் "நாகவனம்" செல்லவில்லையா?

ஹம்ஸகன்:—அரசர் நேற்றே கானகம் சென்றிருக்கிறாரே.

யௌகந்த:—சீ! அவரைத் தொடரும்படி ஆட்களை அனுப்புதல் பயனற்றதே. நாம் ஏமாற்றப்பட்டோம்; ஆனாலும் ஆசையும் சற்றுத் தோன்றுகிறது. இன்றே நாம் உயிர்துறக்கவேண்டியதுதான்.

ஹம்ஸகன்:—அரசர் சௌக்கியமா?

யௌகந்த:—அரசர் சௌக்கியமா? என்றதால் ஒரு பெரிய கெடுதியைத் தெரிவித்ததுபோலாயிற்று; அவர் பிடிபட்டிருப்பார்.

ஹம்ஸகன்:—ஐய! நன்கு அறிந்தீர்கள்; அரசர் பிடிபட்டார்.

யௌகந்த:—அவர் எப்படிப் பிடிபட்டார்? பிரத்யோதனனுடைய பாக்கியத்தால் பெரியதோர் சுமை தீர்ந்தது. இன்று முதல் வத்ஸராஜருடைய அமைச்சர்களுக்கு ஆற்றலின்மையும் இகழ்ச்சியும் உண்டாகிவிட்டன. காரியநிகழுமுன்னே காக்கவல்லவனை 'உருமண்வான்' (உதயனன் அமைச்சன்) எங்குச்சென்றான்? இப்பொழுது புரவிப்படைகள் எங்குப்போயின. ஏனெனில்,

ஹ்ரீஶ்ச ஸௌஹார்த்தஹ்ருதஞ்ச ஶாஸ்த்ரோத்ருதஞ்ச
வ்யாயாமயோக்யவபுஷஞ்ச ஶுணாஜிதஞ்ச ।
ஶ்ரீதம் வஸேத்க்ஷமஹநக்ஷமத்வா ப்ரணஷ்டம்
யாஸ்ய ஸஷ்ஷ்டிஹாரதயா விவஹ்நு ॥

நட்புள்ளனவாயும் குணங்களில் ஈடுபட்டனவாயும் நற்குலத்திற் பிறந்தனவாயும் முயற்சிதளராதவர்களுடன் கூடியனவாயும் குணங்களாற் கொள்ளப்பட்டனவாயும் இருக்கிற புரவிப்படை பிறரால் விலைக்குவாங்கப்பட்டதா? நெருங்கிய கானகத்திற் செல்ல முடியாமல் அழிந்துவிட்டதா? போர்மிகுதியால் உயிர்துறந்ததா?

**ஹம்ஸகன்:**—அரசருடன் காலாட்படை முழுவதும் இருந்தால் இக்கெடுதி நேர்ந்திராது.

**யௌகந்த:**—அரசரிடம் காலாட்படை ஏது?

**ஹம்ஸகன்:**—ஐய! கேட்கவேண்டும்.

**யௌகந்த:**—வழிநடையால் களைப்படைந்திருப்பீர். வீற்றிருக்க வேண்டும்.

**ஹம்ஸகன்:**—ஐய! நல்லது. (உட்கார்ந்து) ஐய! கேட்கவேண்டும். இரவுபுலருமுன்னமே வாகனங்களில் ஏறிச்செல்லத்தகுந்த வேளையில் 'வாலுகா' தீர்த்தத்தின்வழியாக நர்மதையாற்றைக் கடந்து மூங்கிற்காட்டில் அரசர் கூடாரம் அமைத்தார். குடைகள் பிடித்தவர்களாயும் யானைக்கூட்டங்களை அழிக்கவல்லவர்களாயுமுள்ள காலாட்களுடன் 'மதயந்தி' மலைக்குச்செல்லும்நெறியால் அவர் நாகவனத்துக்குச் சென்றார்.

**யௌகந்த:**—பிறகு?

**ஹம்ஸகன்:**—பிறகு அம்பெய்யுமெல்லையில் பரிதி மேலே கிளம்பியபின்னும், சில 'யோசனை' தூரம் சென்றார். ஒரு குரோசதூரத்திலிருக்கிற 'மதயந்தி' மலையை நெருங்குமுன், குளத்துச்சேற்றினால் உடல்முழுதும் பூசப்பட்டு, அறைகுறையாய் அலங்கரிக்கப்பட்டது போன்ற ஒரு யானைக்கூட்டம் எங்கள் கண்களுக்குப் புலப்பட்டது.

**யௌகந்த:**—பிறகு?

**ஹம்ஸகன்:**—பிறகு படைகள் யோசனையிலாழ்ந்தபோது, யானைக்கூட்டமும் நெருங்கி ஒன்றாய்ச்சேர்ந்தது. அச்சமயத்தில், இந்தக் கெடுதியைச் செய்தவனான காலாள் ஒருவன் அரசரிடம் நெருங்கிவந்தான்.

யௌகந்த:—நில்லும். இதிலிருந்து 'ஒரு குரோசதூரத்தில், மல்லிகைக் கொடிகளால் மறைக்கப்பட்டதும் நகங்களும் கொம்புகளும் அல்லாத மற்றையுறுப்பெல்லாம் ஒரே நீலநிறமானதுமான தொரு யானையை நான் கண்டேன்' என்று நீர் சொன்னீரல்லவா?

ஹம்ஸகன்:—ஆம் ஐய! தங்களால் அறியப்பட்டது.

யௌகந்த:—ஹம்ஸகரே! நாம் விழித்துக்கொண்டிருக்கும் போதே நமன் மிக்க வலிமையுள்ளவனுயிருக்கிருனே! பிறகு பிறகு?

ஹம்ஸகன்:—அந்தக்கொடியோனுக்கு நூறுபொன்கொடுத்து அவனிடம் 'காட்டுயானைகளைப் பழக்குவதிற் பயிற்சிபெற்றதான "நீலகுவலயம்" எனப் பெயர்வாய்ந்த ஒரு சிறந்த யானை இதோ இருக்கிறது; நீங்கள் எல்லோரும் எச்சரிக்கையுடன் இருங்கள்; வீணையுடன் நானேபோய் அந்த நீலயானையைக் கொணர்வேன்.' என்று அரசர் சொன்னுர்.

யௌகந்த:—வெற்றிக்காகவே; ஹா! நட்பின்மிகுதியால் முன் விருத்தாந்தம் கவனிக்கப்படவில்லை. பிறகு?

ஹம்ஸகன்:—பிறகு, இரண்டுமடங்குள்ளதுபோல் நீண்டதான வழியைக் கடந்து, பெரியதொரு மரத்தின்நிழலிற் கறுப்புநிறத்தால் உடல்தெரியாமல் மறைந்துகொண்டிருந்ததும் வெள்ளிய கொம்புகளால் புலப்படத்தக்கதுமான அந்தத் தெய்வத்தன்மையுள்ள யானையின் உருவம் நூறுவிற்கிடைதூரத்திற் காணப்பட்டது.

யௌகந்த:—யானையன்று (காணப்பட்டது); நமது துன்பமே உருவெடுத்தாற்போற் காணப்பட்டது என்று சொல்லலாகும். பிறகு! பிறகு!

ஹம்ஸகன்:—பிறகு அரசர் குதிரையைவிட்டிறங்கித் தேவர்களைத் தொழுது யாழை எடுத்துக்கொண்டார். அப்பொழுது உறுதிகொண்டதான பெரிய சிங்கம் ஒன்று காணப்பட்டது.

யௌகந்த:—சிங்கமா? பிறகு பிறகு?

ஹம்ஸகன்:—சிங்கத்தைக்காண நாங்கள் புறப்பட்டோம். அப்பொழுது மிகவும் ஆற்றலுடையவர்களும் ஆயுதம் தரித்தவர்களுமான வீரபுருஷர்களால் நிரப்பப்பட்ட அந்தக் கபடயானையும் எங்களைநோக்கி வந்தது.

யௌகந்த:—பிறகு?

ஹம்ஸகன்:-பிறகு அரசர் தம்முடன் வந்தவர்களில் ஒவ்வொருவனையும் பெயரையும் கோத்திரத்தையும் சொல்லி அழைத்து "எவ்விதத்திலும் இது பிரத்யோதனனுடைய சூழ்ச்சியே; என்னைத் தொடர்ந்துவாருங்கள்; எதிரியின்முயற்சிகளை என் வலிமையால் நான் சரிப்படுத்துகிறேன் (பயனற்றவையாகச் செய்கிறேன்.)" என்றுகூறி அரசர் எதிரியின் படைக்குள் புகுந்தார்.

யௌகந்த:—எதிரியின் படைக்குள் நுழைந்தாரா? அதுவும் பொருந்தியதே.

ஶூரஸ்யோதா³ரவம்ஶஸ்ய ஜாதமாநஸ்ய ஶத்ருபி⁴:।
ஸம்ப்ரமோக்ஷாய நஶ்யந் க்ஷுப்⁴யதி வஞ்சிதஸ்ய ॥

சூரரும் உறுதியுள்ளவருமான அரசர் தாம் பிறரால் வஞ்சிக்கப்பட்டமையாற் சற்று வெட்கமடைந்தும் ஊக்கத்தைவிடாமல் வேறு என்னசெய்திருக்கக்கூடும்? பிறகு! பிறகு!

ஹம்ஸகன்:—தம்மனம்போல் நடப்பதான 'ஸுந்தரபாடலம்' என்ற புரவிமேல் ஏறி எண்ணற்கரிய பல பகைவர்களை விளையாட்டாகவே அடர்த்து எஞ்சியவர்களுடன் வருந்திப் போர்செய்தார். உடன்வந்தவர்களிற் பலர் அழிந்துபோனாலும், என்னால் அல்லது தம்மாலேயே காக்கப்பெற்றவராகக் காலைவேளை முழுதும் போர் செய்தார்; மிகவும் தாக்கப்பட்டமையால் அவர்குதிரையும் கீழே சாய்ந்தது; கடும் வெய்யில்வேளையில் அரசரும் மயக்கத்தை அடைந்தார்.

யௌகந்த:—அரசர் எவ்வாறு மயக்கமடைந்தார்? பிறகு?

ஹம்ஸகன்:—பிறகு அருகேயிருந்த புதர்களிலிருந்து கொணரப்பட்டனவும் பெயர்தெரியாதனவும் கரடுமுரடாயுள்ளனவும் ஆன காட்டுக்கொடிகளால் அரசர் கட்டப்பட்டார்.

யௌகந்த:—ஆ! அரசர் பிணிக்கப்பட்டாரா?

வீநாஂஸஸ்ய விக்ருஷ்டவவ்ஃஹதெ
நாகெந்த்ரஹஸ்தாக்ருதெ
ஶ்ராவாஸ்ஃாலிகாஸ்ய தூராஹாரணா
ஷாணாயிகாரொாவிணஃ।
விஷ்ராவ்யவயிதாஃ ஶ்ரெண ஸாஹ்ருதாம்
ஸக்தஷாராஸிஂஹெெந
ந்யஷ்ஸம் தஸ்ய ஸாஜபுயஸ்ய வயய
ஷாநாஂதரெ ஸஂயநழ॥

பருத்த தோளுடன்கூடியதும், நீண்டகணுக்களால் பெரிதானதும், வில்லைத் தாங்குவதான உள்ளங்கையுடன் விளங்குவதும், தூரத்திலிருந்தே (குறியை) அடிக்கவல்ல அம்புகளை எய்வதும், அந்தணர்களைத் தொழுவதும், அன்பர்களை இறுகத்தழுவிக்கொள்வதால் ஆதரவுசெய்வதுமான அரசருடைய கையிணைகளில் பொன்வளையல் பூட்டுகிற இடத்தில் (கொடிகளால்) கட்டப்பட்டதா? பிறகு அவருக்கு எப்பொழுது நினைவுவந்தது?

ஹம்ஸகன்:—அந்தப் பாவிகளின் செருக்கு அடங்கினபோது.

யௌகந்த:—நல்லது; அவருடைய உடலுக்கே துன்பம் விளைந்தது; ஒளிக்கு ஒரு குறையும் இல்லை.

ஹம்ஸகன்:—அரசர் மயக்கம் தெளிந்து விழித்துக்கொண்டபோது, அவரைநோக்கி, "இவனால் என் உடன் பிறந்தான் கொல்லப்பட்டான், இவனால் என் தகப்பன் மாய்க்கப்பட்டான், இவனால் என் புதல்வன் வீழ்த்தப்பட்டான், இவனால் என் நண்பன் நாசம்

செய்யப்பட்டான்" என்று பலபடியாக அவருடைய வலிமையைப் புகழ்ந்துகொண்டு அந்தப் பாவிகள் ஓடிவிட்டார்கள்.

யௌகந்த:—பிறகு பிறகு?

ஹம்ஸகன்:—மற்றொரு விந்தை. தீயசெயலைச் செய்ய ஒருவன் துணிந்தான். அவன், அரசரைத் தெற்குமுகமாகத் திருப்பிப் போர் புரிவதால் சிதறியிருக்கிற தலைமயிர்களைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு கையிற் பிடித்த கத்தியால் அரசரைத் தாக்கும்பொருட்டு வேகமாய் ஓடிவந்தான்.

யௌகந்த:—சொல்வதைச் சற்று நிறுத்துங்கள். நான் மூச்சு விட்டுக்கொள்கிறேன். (மனத்தை அமைதிப்படுத்திக்கொள்கிறேன்.)

ஹம்ஸகன்:—அந்தக்கொடியோன் தன்வேகத்தாலே இரத்தப் பெருக்காற் சேருகி விட்ட தரையில், கால்தடுக்கி முயற்சியும் தடைப்பட்டு அரசரால் கொல்லப்பட்டுக் கீழே சாய்ந்தான்.

யௌகந்த:—அந்தக் கொடியவன் வீழ்ந்தானா! ஓ!

பரைரநாக்ராந்தா யத்ஸம்ஸ்காரவர்ஜிதா ।
ஸ்வர்த்ராணவதாம் ரக்ஷிதா பரிரக்ஷதி ॥

பகைவர் படையெடாமலும் அறம்வழுவாமலும் காக்கப் பெற்ற பூமியே, தன்னைக் காத்தவருக்குத் துன்பம்வருங்காலத்தில், அவரை நன்றியறிதலுடன் காக்கிறது.

ஹம்ஸகன்:—பிறகு குந்தம் என்ற ஆயுதத்தால் முன்பு அரசரால் தாக்கப்பட்டு மயக்கம் அடைந்தவனும், பிரத்யோதனனுடைய அமைச்சனுமான சாலங்காயனனென்பவன் 'பரபரப்பு வேண்டாம் வேண்டாம்' எனக் கூறிக்கொண்டு அவ்விடம் வந்தான். பிறகு, அந்நிலைமையில் அரசர் மிக்க வணக்கத்துடன் கட்டவிழ்த்துவிடப்பெற்றார்.

யௌகந்த:—அரசர் கட்டவிழ்த்துவிடப்பெற்ருரா? ஓ! சாலங்காயன! நல்லது நல்லது; நிலைமையென்பது பகைவனையும் நண்பனாக்கிவிடுகிறது. ஹம்ஸகரே! கலக்கத்திலிருந்து என்மனம் சற்றுத் தெளிந்தது. பிறகு அந்த நல்லோனால் என்ன செய்யப் பட்டது?

ஹம்ஸகன்:—பிறகு அந்தப்பெரியோர் வழிபாடுகளுடன் அரசரிடம் நன்மொழி வழங்கி அவர் மேனி படைகளால் அழுந்தத் தாக்கப்பெற்றிருப்பதால் அவர் ஊர்திகளில் இவர்ந்துசெல்வது கூடாதென்று, அவரைப் படுக்கைப்பல்லக்கில் ஏற்றி, 'உஜ்ஜயநீ' நகரத்துக்கே அழைத்துச்சென்ருர்.

யௌகந்த:—அரசர் கொண்டுபோகப்பட்டார். இது ஒரு கெடுதி.

வஹ தஸ தஹ்யஂகஸ்ஹோாகஸெஷெஷாZ திெநாராய꞉।
ஹெவ்ாதஸ்ய நஷ்ரிதாஸ ஷ்ாஜீ ஊஂவெஷவத ெத॥

இது நமக்கு ஒரு குறையே (நமக்கு ஒரு களங்கம்); நாம் நினைத்த தற்கு மாருனது; பிரத்யோதனன்பெருந்தன்மையால் அரசர் துன்பமுற்றிருக்கிருர்.

கயஹணி தவவஂ ஊக்ஷ்யெத தஂ நஜொ꞉
கயவொஷவாக்யஂ ஶ்ொஷ்யெத ஷிஜவாக்ய꞉।
கயவிஷயவஂய்யஂ யாரயிஷ்யதிஷெஂ
ஹணிவதி நிரஜ꞉ ஸதெ்யா யஷிெதாவா॥

முன்பு பொருளாகக்கருதப்பெருத அவனை அரசர் எவ்வாறு காண்பார்? சொற்பிறழாதவரான அவர், கடுஞ்சொற்களை எவ்வாறு கேட்பார்? இலக்கின்றியே வீணுகிற சினத்தை அவர் எப்படியடக்குவார்? புகழப்பட்டாலும் இகழப்பட்டாலும் கட்டுப் பட்டவன் வணங்கவேண்டுவதே.

பிரதிஹாரி:—(அரங்கிற் புகுந்து) இதோ நோன்புச் சரடுகள்.

யௌகந்த:—𑌯𑌾𑌨𑌿 𑌤𑌾𑌨𑍍𑌯𑌵𑌸𑌿𑌤𑌾𑌨𑌿 𑌕𑌾𑌲𑍇
𑌭𑌾𑌗𑍍𑌯𑌕𑍍𑌷𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌫𑌲𑌤𑌾𑌂 𑌗𑌤𑌾𑌨𑌿।
𑌤𑌤𑍍𑌸𑌂𑌹𑌾𑌰𑍇𑌷𑍍𑌵𑌿𑌵 𑌰𑌣𑍇 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍇
𑌨𑍀𑌰𑌾𑌜𑌨𑌾 𑌕𑍌𑌤𑍁𑌕𑌮𑌙𑍍𑌗𑌲𑌾𑌨𑌿॥

போர்முடிந்தபிறகு, நீராஜனம் முதலிய உபசாரங்கள் புரவிக்கு எவ்வாறு பயனற்றனவோ, அவ்வாறே அகாலத்திற்கிடைத்த இவை (நமது) பாக்கியக்குறைவால் பயனற்றவையாயின.

பிரதிஹாரி:—இதோ மங்களச்சரடு.

யௌகந்த:—வைப்பாயாக.

பிரதிஹாரி:—அரசருடைய அன்னையாரிடம் என்னசொல்ல வேண்டும்?

யௌகந்த:—இவ்வாறு.

பிரதிஹாரி:—அது என்ன?

யௌகந்த:—இது.

பிரதிஹாரி:—ஐய! சொல்லுங்கள். ஐய! சொல்லுங்கள்.

யௌகந்த:—அல்லது, இதை மறைக்கமுடியாது. விஜயே! மனத்தைத் திடப்படுத்திக்கொள். (காதில்) இதுவே.

பிரதிஹாரி:—ஹா!

யௌகந்த:—நீ விஜயையல்லையோ.

பிரதிஹாரி:—பாக்கியமற்றவளான நான் செல்லுகிறேன்.

யௌகந்த:—விஜயே! அன்னையாரிடம் அரசர் பிடிபட்டாரென்று அவசரப்பட்டு உரைக்கக்கூடாது; அன்பின் மிகுதியால் வலிமையற்றதான தாயின்மனத்தைக் காக்கவேண்டும்.

பிரதிஹாரி—ஆனல் எவ்வாறு சொல்லுவேன்?

யௌகந்த:—கேட்பாயாக.

பூர்வம் தாவத்யுத்தஸம்பத்ததோஷா:
ஶ்ரோதவ்யா யாவநா: ஸம்ஶயாநாம் ।
ஸந்திக்தேऽர்தே விஜ்ஞாதே வா விநாஶே
பஶ்சாச்சோகே கார்யதத்த்வம் நிவேத்யம் ॥

போரில் நிகழக்கூடிய கெடுதிகளையும், ஐயத்துக்கிடமான செய்திகளையும் முதலில் நீ உரைக்கவேண்டும்; முடிவு எவ்வாருயிற்ரு? அல்லது நாசம் ஏற்பட்டதோ என்று (அவர்கள்) சிந்தித்து வருத்தமடையும்போது, உண்மையாய் நடந்ததைத் தெரிவிக்க வேண்டும்.

பிரதிஹாரி:—அறிந்துகொண்டேன். (வெளிச்செலவ்)

யௌகந்த:—ஹம்ஸகரே! நீர் ஏன் அரசருடன் போகவில்லை?

ஹம்ஸகன்:—நான் கடமையை நிறைவேற்ற முயலும்போது ஸாலங்காயனன் "நீர் கௌசாம்பிநகரம் சென்று நிகழ்ந்தசெய்தியைத் தெரிவிப்பீராக" என்று என்னிடம் கேட்டுக்கொண்டான்.

யௌகந்த:—அவர் ஆசையற்று அவர்களுடன் சென்ருரா? அல்லது நட்புள்ளவர் அருகே இருப்பதை அவர் பொறுக்கவில்லையா?

ஹம்ஸகன்:—ஆம்.

யௌகந்த:—அவர் வியப்படைந்தாரா? அல்லது நல்லதாகவே முடிவுபெறும் என்று வாளாவிருந்தாரா? அரசர் என்னைக்குறித்து எதுவும் உரைக்கவில்லையா?

ஹம்ஸகன்:—ஐய! இருக்கிறது. நான் அவரை வலம்வந்தபோது செய்திகளை நிரம்ப உரைக்கவிரும்பியவர்போல், நீர் ததும்பிய கண்களுடன் "செல்வீராக, யௌகந்த" (என்று மெதுவாகச் சொல்லல்.)

யௌகந்த:—கூசாமற் சொல்லவேண்டும். இது அரசருடைய மொழியன்ருே!

ஹம்ஸகன்:—"யௌகந்தராயணரைப் பார்ப்பீராக" என்று சொன்னார்.

யௌகந்த:—அமைச்சர்கள்யாவரையும் விட்டு "யௌகந்த ராயணனைமட்டும் பார்க்கவேண்டும்" என்று கூறினாரா?

ஹம்ஸகன்:—ஆம்.

யௌகந்த:—சரியானபடி கைம்மாறு செய்யாதவனும் அரச ருடைய உப்பை உண்டும் கடமையைச் செலுத்தாதவனும் பேதையும் ஆன என்னைப் பார்க்கத்தகுந்தவனென்று அவர் கருதினாரா?

ஹம்ஸகன்:—ஆம்.

யௌகந்த:—அரசர் என்னை மற்றவர்களைக்காட்டிலும் அதிக மாக மதித்தார்போலும்.

> ரிபுந்ருபநகரே வா ஸம்யதே வா வநே வா
> ஸஹம்ருதவிநாஶ: ப்ராப்ய த்ருஷ்ட்வா த்ஸ்யுநிஷ்ட: ।
> ஜித இதி க்ருதகர்வம் வஞ்சயித்வா ந்ருபம் தம்
> புநரபி ம்ருதராஜ்ய: ஸ்வாமிந: ஶ்லாகநீய: ॥

பகையரசன் நகரிலேனும் சிறையிலேனும் கானகத்திலே னும் அரசருடனிருந்து நாசத்தை அடைவதேயன்றி இறந்தபிற கும் அரசரைவிட்டுப் பிரியாமலிருந்தாலன்றோ நான் நல்லோ னாவேன். சார்ந்தோர்களால் புகழப்பெற்று, 'நானே வெற்றியடைந் தேன்' என்று செருக்குற்றிருக்கும் அந்த அரசனை ஏமாற்றி நான் மறுபடியும் ராஜ்யத்தை அடைவேனா?

(திரைக்குள்) ஹா! ஹா! ஐய!

யௌகந்த:—

> ஹர்ஷஶோகவ்யதிகரோ யதாஶக்தி நிவேத்யதே ।
> ஹர்ஷஶ்ச ஶ்ரீஹிரவஸாயேப்யம் ஸந்தீர்ணாஸந்நவணேப்யதே ॥

துக்கத்தை ஆற்றிக்கொள்ளும்பொருட்டுப் பெண்டிர்கள் இயன்றமட்டும் வாய்விட்டுக் கதறுகிறார்கள். துக்கத்தைப் பொறுக்கமுடியாமையால் அமைச்சர்களும் அத்தகையினரே என்று, மடந்தைமார் கருதுகிறார்கள்போலும்.

பிரதிஹாரி:—(அரங்கிற்புகுந்து) ஐய! அரசரின் அன்னையாரவர்கள்,—

யௌகந்த:—என்ன? என்ன?

பிரதிஹாரி:—சொல்லுகிறார்கள்.

யௌகந்த:—என்னவென்று?

பிரதிஹாரி:—நண்பனால் தொடரப்பெற்றவனான வத்ஸராஜன் நிலைமை இவ்வாறு இருக்கிறது. இதற்கு என்ன உபாயம் செய்யலாம்? தோழர்களுக்குச் சன்மானஞ்செய்து இதற்குப் பரிகாரம் செய்யவேண்டும். எவன் துன்பம் நேர்ந்தபோதும் கலக்கம் அடையவில்லையோ, இன்னல்களிற் சிக்கிக்கொண்டபோதும் எவன் ஊக்கத்தை இழக்கவில்லையோ, வஞ்சிக்கப்பட்டாலும் எவனுடைய முயற்சி தளரவில்லையோ, எதிரிகளால் தாக்கப்பட்டகாலத்திலும் எவன் உயிரைவிடவில்லையோ அத்தகைய அறிவாளியை வினவுகிறேன்: “என் குழந்தைக்கு முதலில் தோழனும் பிறகு அவனுக்கு அமைச்சனும் என்னிடம் புதல்வன்போல் அபிமானமுள்ளவனுமான நல்லோன் என்குழந்தையை மீட்டுக்கொணர்வானா?” என்று.

யௌகந்த:—அன்னையினால் அரசவம்சத்துக்குரியவையான தீரச்சொற்களே உரைக்கப்பெற்றன. ஆச்சரியம்! அவர்களுடைய கட்டளைக்கு நான் வணங்கிக் கீழ்ப்படிவேன். விஜயே! தீர்த்தம் கொணர்வாயாக.

பிரதிஹாரி:—ஐய! அப்படியே (வெளிச்சென்று மறுபடியும் புகுந்து) இதோ ஜலம்.

யௌகந்த:—கொண்டுவா. (ஜலத்தைவாங்கி ஆசமனம் செய்து) அன்னையவர்கள் என்ன கூறினர்கள்?

பிரதிஹாரி:—"என் புதல்வன் என் குழந்தையைக் கொணர்வானாக" என்று.

யௌகந்த:—ஹம்ஸகரே! அரசர் என்ன சொன்னர்?

ஹம்ஸகன்:—"யௌகந்தராயணனைக் காண்பாயாக" என்று.

யௌகந்த:—𑌯𑌦𑌿 𑌶𑌤𑍍𑌰𑍁𑌬𑌲𑌗𑍍𑌰𑌸𑍍𑌤𑍋 𑌰𑌾𑌹𑍁𑌣𑌾 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾 𑌇𑌵 ।
𑌮𑍋𑌚𑌯𑌾𑌮𑌿 𑌨 𑌰𑌾𑌜𑌾𑌨𑌂 𑌨𑌾𑌸𑍍𑌮𑌿 𑌯𑍌𑌗𑌨𑍍𑌧𑌰𑌾𑌯𑌣𑌃 ॥

இராகுவால் பற்றப்பட்ட சந்திரனைப்போல் பகைவர்வலியாற் சிறைப்பட்ட நம் அரசரை மீட்டுக்கொணராவிடில் நான் யௌகந்தராயணனில்லை.

பிரதிஹாரி:—ஐய! அவ்வாறே. (வெளிச்செலல்)

நிர்முண்டகன்:—(அரங்கிற் புகுந்து) ஐய! ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. அரசருடைய க்ஷேமத்தைக் கருதி அழைக்கப்பட்டுவந்தவர்களான அந்தணர்கள் போஜனம் செய்யும்போது, பித்தன் வேஷம்பூண்ட ஒரு பார்ப்பனனல், "நீங்கள் எல்லோரும் இஷ்டப்படி உணவுகொள்ளுங்கள்; இந்த அரசகுலத்துக்கு நன்மையுண்டாகும்" என்று உரக்கச் சிரித்துரைக்கப்பட்டது. இவ்வாறு சொல்லிக்கொண்டே அவன் எங்கேயோ மறைந்துவிட்டான்.

யௌகந்த:—உண்மைதானு?

(பிறகு ஒரு பிராமணன் அரங்கிற் புகுதல்.)

பிராமணன்:—பெரியோரால் என்னுடைய உபயோகத்துக்கென்று அளிக்கப்பட்ட ஆடைகள் இவை. இவ்வாடைகளை உடுத்துக்கொண்டதால் நான் வியாஸபகவானுகவே ஆயினேன்.

யௌகந்த:—வியாஸர் இவ்வாறே வந்தனரா?

பிராமணன்:—ஆம்.

யௌகந்த:—ஆதலால் நாம் அவரைப் பார்ப்போம்.

பிராமணன்:—தாங்கள் காணலாம்.

யௌகந்த:—உருவமே மாறிவிட்டதே. ஓ! நல்லது, அரசர் அருகிலே சென்றுவிட்டேன். இப்பொழுது எனக்கு அறிவுபுகட்டுபவர்போல் இவர்கள் வெளியில் விடப்பெற்றிருக்கிறார்கள்.

𑌉𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌵𑍇𑌷𑍋 𑌹𑍍𑌯𑌾𑌗𑌤𑌸𑍍𑌤𑍇𑌨 𑌸𑌾𑌧𑍁𑌨𑌾 ।
𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌰𑌾𑌜𑌾𑌨𑌂 𑌮𑌾𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌚𑍍𑌛𑌾𑌦𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

அந்தச் சாதுவால் பித்தன்போல் வேஷம்பூண்டுகொள்ளப்பட்டது; அரசரையும் விடுவித்து என்னையும் அவர் மறைப்பார்.

பிரதிஹாரி:—(அரங்கிற் புகுந்து) ஐய! அரசருடைய அன்னையார் "என்புதல்வனைக் காணவிரும்புகிறேன்" என்று சொல்லுகிறார்கள்.

யௌகந்த:—இதோ வந்துவிட்டேன். ஐய! பூஜைக்கிரகத்தில் என்னை எதிர்பார்த்திருப்பீராக.

பிராமணன்:—நல்லது. (வெளிச்செலல்)

யௌகந்த:—ஹம்ஸகரே! இப்பொழுது சற்று இளைப்பாறுங்கள்.

ஹம்ஸகன்:—ஐய! அப்படியே. (வெளிச்செலல்)

யௌகந்த:—𑌕𑌾𑌷𑍍𑌠𑌾𑌦𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌮𑌥𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌤𑍍
𑌭𑍂𑌮𑌿𑌸𑍍𑌤𑍋𑌯𑌂 𑌖𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌾 𑌦𑌦𑌾𑌤𑌿 ।
𑌸𑍋𑌤𑍍𑌸𑌾𑌹𑌾𑌨𑌾𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌸𑌾𑌧𑍍𑌯𑌂 𑌨𑌰𑌾𑌣𑌾𑌂
𑌮𑌾𑌰𑍍𑌗𑌾𑌰𑌬𑍍𑌧𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌯𑌤𑍍𑌨𑌾𑌃 𑌫𑌲𑌨𑍍𑌤𑌿 ॥

அரணிக் கட்டையைக் கடைந்தால் நெருப்பு உண்டாகிறது; பூமியைத்தோண்டினால் தண்ணீர் ஊறுகிறது; ஊக்கத்துடன்கூடின மனிதர்களால் நிறைவேற்றக்கூடாத காரியமே இல்லை; நல்வழியில் தொடங்கப்பெற்ற முயற்சிகளெல்லாம் பயனுள்ளவைகளே.

(இருவரும் வெளிச்செலல்.)

**முதலங்கம் முற்றிற்று.**

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமி சாஸ்த்ரி, B.A., B.L.

விகலன்:—அவ்வாருயின் நீ உன்கருத்தை வெளியிடாமல் மனத்தில் வைத்திரு. உன் விருப்பம் நிறைவேறுங்காலம்வரும் பொழுது சொல்லுகிறேன். உன் தாய்தந்தையரிடத்தில் இதை வெளியிட்டு அவர்கள் சம்மதத்தின்மேல் நாம் மணஞ்செய்து கொள்வோம். உன்னைப் பலரும் தேடக்கூடும். அதிகநேரம் தாமதித்துவிட்டாய். உடனே போய்வா.

சித்திராங்கி:—இதுவும் தட்டிக்கழிக்கிறவழியில் ஒன்றுதானே?

விகலன்:—என்னை நீ புருஷனுக அடையும்படி தெய்வசங்கற்பம் இருந்தால் அதை யாரும் மாற்றமுடியாது.

சித்திராங்கி:—இந்த வேதாந்தங்கேட்கவா நான் உங்களைத் தேடிக்கொண்டு இங்கேவந்தது?

விகலன்:—நமக்குப் பிராப்தமில்லாவிட்டால் நாம் எவ்வளவு முயன்றும் பயன்படாது.

சித்திராங்கி:—நம்மால் இயன்றவரை நாம் முயன்றுவிட்டு அதன் பிறகுதான் பிராப்தமுண்டா? இல்லையா? என்பதைச் சோதிக்க வேண்டும். பறிக்கமுயலாமலே மாங்காயும் தேங்காயும் உடைத்துத் தின்னமுடியுமா?

விகலன்:—தோட்டத்தின்கதவு ஓசைப்படுகிறது.

சித்திராங்கி:—என்மனத்தை உங்களிடம் விட்டுவிட்டு வெற்றுடலைச் சுமந்துகொண்டுபோகிறேன். அது இருக்க உங்களருகே சற்றிடங்கொடுங்கள். [போதல்.]

விகலன்:—[தனக்குள்] இவள் மனவுறுதி வியக்கத்தக்கது. தன் தாய்தந்தையர்க்கு என்ன துக்கம்விளையினும், என்னையே கணவனுக அடைவதாய்த் தீர்மானித்துவிட்டாளே! மகா சுத்த வீரர்களுக்கும் அருமையான மனவுறுதியை இவள்போன்ற சிறுமியருக்கும் கொடுக்கும்படியான மன்மதனைக் கரும்பால் வில்லும் சுரும்பால் நாணும் அரும்பால் அம்பும் உடையவனென்பது அறியாமையோ? இல்லை. அவைகள் மனத்தை வசீகரிக்கும் கருவிகளின் இயல்பான மென்மையைக் காட்டுகின்றனவோ!

---

## அங்கம் - IV.

### களம் - 2.

இடம்:—காடு.

பாத்திரங்கள்:–கருப்பன், சப்பாணி, வீரன், இருளன் என்னும் திருடர் நால்வர்.

கருப்பன்:—[பாடுதல்.]

1 இமயமலைச் சாரலிலே எங்களுடை ஊரு
எங்கள்குலம் பரம்பரையாய்க் கள்ளரென்று பேரு.

2 கழியெடுத்துச் சுற்றிவரக் கற்றிடுவோம் நன்றாய்
விழியெடுத்துப் பார்ப்பவர்க்கு வேற்றுருவாய்க் காண்போம்.

3 கல்லினைக் கவணில்வைத்துக் காதவழி யெறிவோம்
மல்வலியால் மடக்கிடுவோம் மாறிவரு பவரை.

4 கத்தியிரு கையெடுத்துச் சுத்திவரும் போது
எத்தனைபேர் வந்தாலும் சத்தியமாய்க் கொல்வோம்.

5 சரக்குப்பழங் கள்வைத்தெம் சாமிதனைத் தொழுவோம்
இறக்கும்பொழு தேஎனினும் எண்ணிடுவோம் அவரை.

6 கன்னக் களவிடுவோம் காட்டுக்கொள்ளை யடிப்போம்
சின்னத் திருட்டுக்களிற் சேராமல் இருப்போம்.

சப்பாணி:—அதெல்லாம் ரொம்ப ஒளுங்குதான். நம்ம வீரஞ் செஞ்சவேலை எதிலே சேந்ததுரா?

கருப்பன்:—அதென்னடா மனிசஞ் செய்யர வேலையா? அவுக வீட்டுச் சோத்தைத் தின்னூட்டுப் புள்ளைமாதிரி பளகிட்டு அவுக நம்பிக்கையாய்ப் போயிருக்கச்சையா அம்பிட்டையும் தூக்கிக்கிட்டு வருவாக.

சப்பாணி:—அந்தப்பய செஞ்சது நம்ம சாதிக்கி எளப்பமின்னு இந்த இருளன்கிட்டச் சொன்னேண்டா! அந்தப்பய அடிக்க வர்ரான்.

இருளன்:—நீங்க அடித்த கொள்ளை ரொம்ப ஒளுங்காக்கும்.

கருப்பன்:—மனுசனை எதிர வெச்சுக்கிட்டுத் தீவட்டிபோட்டு எடுத்துக்கிட்டுவர்ரது எப்படி? பொறத்தாண்டை தூக்கிக்கிட்டுப் பயந்து ஓடிவர்ரது எப்படி? அது களவாணிப்பயலுக செய்யர வேலையல்ல? சாதிக்கள்ளப்பயலுக்குப் பொறந்தபய செய்யர வேலையா?

வீரன்:—'கன்னக்களவிடுவோம்' என்று பாடினையே. எதிர வெச்சுக்கிட்டுத்தான் எடுத்துக்கிட்டுவர்ரியோ?

கருப்பன்.—அடே! சொத்துக்காரன் வீட்டுலே இருக்கச்சே தானே எடுத்தாரம். அவென் தூங்கினு அவனை வேறெ எளுப்பச் சொல்றியோ?

இருளன்:—முளிச்சிக்கிட்டாத்தான் ஓடுரீங்களே! அப்போ?

கருப்பன்:—அவன் நமக்குப் பயந்து வெச்சிருக்காத்தைத் தானேடா தைரியமாய்ப் போய் எடுத்தாரம்? இந்தப்பயமாதிரி நம்பினவுகளையா மோசஞ்செய்யரம்?

வீரன்:—காட்டிலே வர்ரவங்களைக் கொள்ளையடிக்கிறீங்களே! அதுமாத்திரம் ஒளுங்கோ.

கருப்பன்:—சொத்தெவெச்சுக் காப்பாத்தமுடியாதவன் அதை வெச்சிருக்கப்படாது. அதானேடா நம்ம கச்சி? காப்பாத்தமுடியாதபய காட்டுக்கேன் கொண்டுவர்ரான்?

வீரன்:—எங்கிட்டக் கொடுத்தபய ரொம்பக் காப்பாத்தத் தெரிஞ்சபயலாக்கும்.

கருப்பன்:—உன்னை வீரன் இன்னு தெரிஞ்சிருந்தா அவன் வீட்டுக்குள்ளேயே விடுவானு? [சத்தங்கேட்டு] ஏய்! என்னமோ சத்தம் கேக்குதுடா! ஒளிஞ்சிருப்போம் வாடா.

---

## அங்கம் - IV.

### களம் - 3.

---

இடம்:—காட்டின் மற்றொருபுறம்.

பாத்திரங்கள்:—உத்தரனும் சித்திரனும்.

உத்தரன்:—ராஜாங்கத்திற் புகுந்துவிட்டால் அரசர்களுக்குத் தலைகொழுத்துப்போகுமோ?

சித்திரன்:—அப்படியில்லை; பிரஜைகளின் நன்மையைக் கருதுவதை மறந்து தம்முடைய அதிகாரத்தைச் செலுத்துவதிலேயே நோக்கமுண்டாய்விடும்போலிருக்கிறது.

உத்தரன்:—இவர்களுக்கு அதிகாரம் எதற்காக? இவர்கள் அக்கிரமத்தில் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டவா? அல்லது பிரஜைகளின் நன்மைக்கா?

சித்திரன்:—பருத்திக்காய்களிற் பஞ்சு எதற்காக ஏற்பட்டிருக்கிறது?

உத்தரன்:—மனிதன் உடைகள்செய்துகொள்ள.

சித்திரன்:—மனிதனை உடைகள் தரித்துக்கொள்ளவேண்டுமென்றே தெய்வம் படைத்ததோ?

உத்தரன்.—இல்லை அதனால் உடைசெய்கிறார்களே! அதனால்தான் சொல்லுகிறேன்.

சித்திரன்:—அப்பொழுது மனிதனையும் புலி முதலான மிருகங்கள் தின்று ஜீவித்திருப்பதற்கு ஆகாரமாகத்தான் கடவுள் படைத்திருக்கவேண்டும்.

உத்தரன்:—இல்லாவிடிற் பஞ்சை ஏன் படைத்தானென்கிறாய்?

சித்திரன்:—பருத்திவிதைகள் காற்றால் பல இடங்களுக்கும் அடித்துக்கொண்டுபோகப்பட்டு விழுந்த இடங்களில் முளைத்து விருத்தியாகவேண்டி.

உத்தரன்:—அந்தப் பஞ்சைப் பிச்செடுக்கிற பாவத்துக்காகத் தான் இவனும் ஊரூராய்த்தேடி நல்லவிதை வாங்கிக்கொண்டுவந்து போட்டுத் தண்ணீர்விட்டு வளர்த்துச் சாகுபடிசெய்கிறான்.

சித்திரன்:—இவனை அடித்துத் தின்னுகிற பாவம் தீரத்தான் புலிகளையும் மனிதன் கொல்லுகிறான்.

உத்தரன்:—அந்தமாதிரி அவர்களுக்கும் உண்டோ? இல்லையோ? அதிருக்கட்டும். தன் மனமறியத் தன்கண்ணெதிரே தனக்குத் தீங்கு யாரேனும் தேடிக்கொள்வார்களோ?

சித்திரன்:—மனதில் மதமேறிவிட்டால்தான் நன்மை தீமைகளைப் பகுத்தறியும் விவேகம் கெட்டுப்போகிறதே.

உத்தரன்:—அதன்று. இந்த அரசன் தன்னுடைய சைந்யத்திலிருந்த மகாவீரர்களான தளகர்த்தர்களையும் சுத்தவீரர்களையும் தேசத்தைவிட்டோடும்படியும் மந்திரிகள் இவனை வெறுத்து யோசனைசொல்ல மறுத்துவிடும்படியும் பிரபுக்களெல்லாரும் நாட்டைவிட்டுக் காடடையும்படியும் செய்திருக்கிறானே! இதனால் இவனுக்கு க்ஷேமமுண்டாகமுடியுமா?

சித்திரன்:—அகம்பாவம் அதிகரித்து அக்கிரமத்தை ஆரம்பிப்பவர்கள் எந்தவிதத்திலும் தாம் பிடித்ததையே கொண்டு செலுத்துவார்கள். அதனால் என்னநேரிடினும் மதியார்கள்.

உத்தரன்:—அப்பொழுது அகம்பாவம் ஒரு பைத்தியமோ?

சித்திரன்:—அதற்குச் சமானந்தான். பகுத்தறிவிழந்து மனிதன் நடந்துகொள்ளும் மனோநிலைமைகளில் அது ஒன்று.

உத்தரன்:— பாடலீபுரத்தைவிட்டுவந்த நிர்மலகுப்தர் முதலான வீரர்களும் பிரபுக்களும் இந்த வழிதான் போயிருப்பார்களோ?

சித்திரன்:—அவர்கள் பலவழிகளால் இந்தத்தேசத்தைவிட்டே வெளியேறிவிட்டனரென்று தெரிகிறது. சற்றிரு; ஏதோ ஓசை கேட்கிறதே! கவனிப்போம். கள்வர்கள் கூச்சலோ?

---

## அங்கம் - IV.

### களம் - 4.

இடம்:—காட்டின் மற்ளுருபுறம்.

நிர்மலகுப்தர்:—[தனக்குள்] நான் போர்முகத்தெறியும் புன் மதிச்சடமாம். இவர் யோஜனையில் வல்லவராம்! அப்படியானல் இவர் விதித்த வரிகளேயும் சிற்றரசர் பௌருஷங்களேக் குறைத்ததையும் மந்திரிகள் ஒப்புக்கொள்ளட்டுமே! அவர்களும் என் போன்ற ஜடங்கள்தானே! பரம்பரையாய் உயர்பதவியிலிருந்த உத்தமர்களேயெல்லாம் ஒழித்து இழிபிறப்பாளர்களேயும் வித்தை செல்வம் செயல் யாதொன்றுமில்லாதவர்களேயும் உன்னதநிலைமைகளில் ஏற்றினல் நாயைக் குளிப்பாட்டி நட்டுள்ளில்வைத்தது போல்தான். அவர்கள்புத்திதானே அவர்களுக்கிருக்கும். நியாயங்களும் ராஜாங்கமும் தலைகீழாகத்தான் நடக்கும். சிம்மங்கள் இருந்தஇடத்தில் நாயைப்போல் இவன் அரசுபுரிகிருனே. ஆனல் அவன் என்னசெய்வான். மனிதன் மனம் கெட்டால் மற்றெல்லாம் கெடுமென்றே? இவன் சஹவாஸதோஷம் இவனை இப்படிச்செய்தது. நல்லது; இருக்கட்டும். இந்தப் புண்ணியபூமியில் இவன் ராஜ்பபாரம் எவ்வளவுநாள் நடக்கிறதென்று பார்ப்போமே!

---

## அங்கம் - IV.

### களம் - 5.

இடம்:—காட்டின் ஒருபுறம்.

பாத்திரங்கள்:—

கருப்பன் (தடியன்), சப்பாணி (குடியன்), வீரன் (மடையன்), இருளன் (வெறியன்), உத்தரன், சித்திரன், நிர்மலகுப்தர் என்போர்.

கருப்பன்:—ஏலே! குடியா! ஓடியாடா.

சப்பாணி:—ஏலே! மடையா! வெறியா! ஓடியாடா, தடியங் கூப்பிடரான்.

[திருடர் நால்வரும் காட்டினுட் புதரில் ஒளிந்துகொள்ளுதல்.
உத்தரனும் சித்திரனும் வருதல்.]

உத்தரன்:—நாம் இன்று திருடர்கள்கையில் அகப்படப் போகிறோம். அங்கே அவர்கள் கூப்பிட்டுக்கொண்டதைப் பார்த்தால் திருடர்கள் என்பதிற் சந்தேகமேயில்லை.

சித்திரன்:—அப்படி அகப்பட்டுக்கொள்ளப் பிராப்தமிருந்தால் விட்டுவிடுமா?

உத்தரன்:—ஏண்டா! தப்பித்துக்கொள்ள ஏதேனும் வழி பார்க்கிறதா? விதியை நினைத்துக்கொண்டு அவர்கள்கையிற்போய் மாட்டிக்கொள்கிறதா?

சித்திரன்:—இப்படி எங்கேயானும் வழிபாரேன். நானும் வருகிறேன்; என்னால் ஆக்ஷேபணையா?

உத்தரன்:—பக்கங்களில் மிகவும் அடர்ந்த காடாயிருக்கிறதே.

சித்திரன்:—பின்னை வெட்டவெளியில் ஓடிப்போக நாலுபுறமும் வழியிருக்குமிடத்தில்தான் திருடர்கள் வந்து பிடிப்பார்களாக்கும். அவர்களுக்குப் புத்தியில்லையென்று நினைத்துக்கொண்டையோ?

[திருடர்கள் காட்டிலிருந்து திடீரென்று கிளம்பி முன்னால் இரண்டுபேரும் பின்னால் இரண்டுபேருமாய் நிற்றல்.]

கருப்பன்:—நில்லுங்கள். கையிலுள்ளதைக் கொடுத்துவிடுங்கள் முதலில்.

[பின்னாலுள்ள இருவரும் உத்தரன்கையிலும் சித்திரன்கையிலுமிருந்த கழிகளைப் பிடுங்கிக்கொள்ளுதல்.]

வீரன்:—தோளில் என்ன மூட்டை? எடுங்கள்.

உத்தரன்:—நாங்கள் வழிப்போக்கர்கள். எங்களிடத்தில் ஒன்றுமில்லை.

இருளன்:—ஒண்ணுமில்லாமே வழியோடே போவாங்களாக்கும்? அப்போ நாங்க என்னத்துக்குக் காத்திருக்கம்? வெட்டிக்கா?

[என்று சொல்லிக்கொண்டே அவைகளைப் பிடுங்குதல்]

சித்திரன்:—எங்கள் கையிலுள்ளதைக் கொடுத்துவிடுகிறோம். எங்களைத் தொந்தரவுசெய்யாமலிருங்கள்.

கருப்பன்:—இனி நீங்களென்ன கொடுக்கிறது?

[எல்லோரும் மூட்டையை அவிழ்த்தல்.]

[நிர்மலதுப்தர் வருதல்.]

நிர்மலகுப்தர்:—ஏண்டா பயல்களா வழிப்போக்கர்களைக் கொள்ளையிடுகிறீர்கள்? அவர்கள் மூட்டையைக் கொடுத்துவிடுங்கள்.

இருளன்:—ஒங்கமூட்டையை எங்கே வெச்சுட்டு வந்தீங்க? அதையும் கொண்டாருங்களேன்.

[நிர்மலகுப்தர்:—திருடர்களில் ஒருவன் தடியைப் பிடுங்கிக்கொண்டு திருடர் நால்வரையும் அடிக்கத்தொடங்கத் திருடர்கள் சற்றுச் சண்டை செய்து இருவர் கீழேவிழ, மற்றிருவரும் ஓடிவிடுதல்]

உத்தரனும் சித்திரனும்:—[நிர்மலகுப்தரைத் தொழுது] இன்று எங்களை இவர்கள் கையினின்றும் ரக்ஷித்த உங்கள் வயிற்றில் நாங்கள் மறுபிறப்புப் பிறந்தோம்.

நிர்மலகுப்தர்:—நீங்கள் யார்? எங்கே போகிறீர்கள்?

உத்தரன்:—பாஞ்சாலதேசத்திற் சேனைத்தலைவராயிருக்கும் சந்திரர் என்பவருடைய சேவகர்கள். அவர் நண்பர் யாரோ சாகரராம். அவருக்கு ஒரு ஓலைகொண்டு பாடலீபுரத்திற்குப் போய் விட்டுத் திரும்புகிறோம்.

நிர்மலகுப்தர்:—எந்தச் சாகரன்?

சித்திரன்:—நேபாளஞ்செகுத்த நிர்மலகுப்தர் என்று ஒரு பெரிய களகர்த்தரர்மே! அவர் அரண்மனைக்கடுத்த சந்தில்.

நிர்மலகுப்தர்:—[தனக்குள்] நம் சந்திரனை இப்பொழுது பாஞ்சாலதேசத்துக்குச் சேனாபதியாயிருக்கிறான்! நம்தேசத்துக்கு நல்ல காலந்தான்.

சித்திரன்:—நீங்கள் இவ்விதம் எங்களை ரக்ஷித்ததைக்கேட்டு எங்கள் தலைவர் மிகவும் மகிழ்ச்சியடைவார். நீங்கள் இந்தக்காட்டில் தனியாயிருக்கிறீர்களோ?

நிர்மலகுப்தர்:—ஆம்.

உத்தரன்:—நீங்களும் எங்களுடன் வாருங்களேன்? எங்கள் தேசத்தைப் பார்த்துவிட்டுவரலாம்.

2417 ஆதரம் பெருகு மேவற்
சிலதிய ரயினி சுற்றப்
போதவிழ் நறுமென் கூந்தற்
பொனங்கொடி பொற்ப நோக்கிப்
பாதமொண் பனிநீர் பெய்து
விளக்கலும் பசும்பொற் கட்டிற்
காதமீ ரிரண்டு வாசங்
கமழ்மலர்த் தளிமஞ் சார்ந்தான். (கக அ)

2418 நால்வகைப் பொருளுங் குன்றா
நன்கலை வணங்கு கேள்விச்
சால்பினர் வாய்மை போலத்
தண்ணளி தழைந்த பல்பூ
மேல்வரு மணம ளாயும்
விளரிவண் டினொடு மான்கட்
காலதர் நுழைந்த தென்றற்
கன்றினுட் களிகொண் டானே. (ககக)

2419 கானிலம் படர்த லாற்றாக்
கடவுளர்க் கமைத்த வொண்பொன்
வானில வனப்பிற் றாக
வாமியம் வகுத்த மாட்சி
மேனிலத் தமைதி காண்பான்
விழுத்தகை மடந்தை யோடுந்
தேனில நனைக்கும் பூந்தார்த்
திருமக னேறி னானே. (கஉ0)

வேறு.

2420 மன்னா கரின்மைந் தருமடமங்
கையரு மெனமாண் பமைதிளைப்பிற்
பொன்னா கரிக நகரினுக்கப்
புறஞ்செல் புகழா னிருவிசும்பின்
மின்னா னுசுப்பின் மடந்தையொடும்
விள்ளா நிலத்தில் லறம்விழைந்து
சின்னாள் கழிந்த தவணதற்பின்
சிறந்து நிகழ்ந்த திறம்புகல்வாம். (கஉக)

இருபத்துமூன்றாவது: திருமணச்சருக்கம் முற்றும்.

---

## உச. மீட்சிச்சருக்கம்.

2421 தன்னகத் திருந்து தனதுபாத் தருந்தித்
தமனியத் துகினறுங் களபம்
பொன்னருங் கலன்க ளலங்கலெய் தினர்போற்
போதுக டொறும்புது வதுவாய்
அன்னமென் னடையைப் பயந்தவ னளிப்ப
வவனுகர்ந் தறுமதி கழிந்த
பின்னர்நன் புதல்வற் றருதிரென் றனனப்
புதல்வனைப் பெற்றபீ டுடையோன். (க)

2422 தந்தைநிற் றருதி ரென்றன னிறையுந்
தாழ்கிலா தெழுகெனத் தமர்தாம்
முந்தைநான் மறையின் வழிவரு பனுவன்
முழுவதும் வழுவறத் தெளிந்த
சிந்தையா னுயர்ந்த சிறுவனுக் குணர்த்தச்
சிவிகையூர்ந் தவனொரு கணத்துள்
வந்தடி வணங்கா மார்புறத் தழுவி
மகிழ்ந்திருத் தினனொரு மருங்கே. (உ)

2423 அண்ணலங் கவனை யுபயகண் மலர்போன்
றகங்களி தரமுக நோக்கிப்
பெண்ணெனச் சிறந்தார் கொழுநரொ டமைந்தும்
பிறந்தகம் மனையிருந் தனரேற்
புண்ணியப் புதல்வ சிறப்பிலர் சிறந்தார்
புக்கவில் வயினுறை பவராய்க்
கண்ணகன் ஞாலங் கருதுமென் னுளமுங்
கடனது வெனக்களி தருமே. (ங)

2424 ஆதலா லுலகத் தனைவருந் துதிக்கு
மருந்ததி யனையகற் பமைநின்
காதலா ட்னைக்கொண் டெழுவதே நீயுங்
கடனெனக் கடைப்பிடித் துனது
மாதுலன் றனக்குன் மனைமக டனையென்
மனைவயின் விடுதியென் றெடெனப்
பாதம திறைஞ்சி யுணர்த்துதி யெனவே
பகர்ந்துநற் றமரொடும் பணித்தான். (௪)

2425 ஆங்கது கடனு மெனக்குறித் தவனு
மளியதா தையையடி வணங்கி
வீங்கிருட் பிழம்பைத் தெறுமிளங் கதிர்போன்
மிளிர்மணிச் சிவிகைமீ தேறிப்
பாங்கர்வெள் வளையு முரசமுந் தழங்கப்
பனிமதிக் குடைநிழன் மாடத்
தோங்குநன் மறுகு கடந்துமா துலன்வாழ்
வுறுமணி மாளிகை யடைந்தான். (௫)

2426 கவிகளாற் புகழ்தற் கரியகாந் தியினன்
காமர்மா மணிகுயின் றொளிர்பொற்
சிவிகைநின் றிழிந்து மாதுல னிருந்த
செழும்பொன்மண் டபந்தனைக் குறுகிக்
குவிமலர்க் கரங்க ளிரண்டொடுங் கொழும்பொற்
குரைகழ லிணையடி வணங்கிப்
புவியின்மேல் விழுந்த பொழுதெடுத் தணைத்துப்
போந்ததிங் கேதெனப் புகல்வான். (௬)

வேறு.

2427 கற்பின் புறமங் கையர்க்கழுதொண்
கலைமான் மதம்போ துண்டுடுத்து
நற்பண் பினிற்பூ சியுமுடித்து
நன்மாண் கலனெய் தினரெனினுங்

தற்கொண் டவனிற் படராது
தாதை மனைக்கண் ணிருப்பினது
பொற்பின் றுடன்கொண் டெழுவலெனப்
போந்தே னிஃதென் வரவென்றான். (எ)

2428 முன்னே யிழைநல் வினையளித்த
முதல்வா நினது முதுக்குறைசால்
பொன்னே யனையா டனையுமகன்
றிருக்கும் பொறையெம் புறத்தரிதாற்
சொன்னோர் கலைக ளில்லறத்திற்
குரைத்த துணிவு மிஃதென்றால்
என்னே யென்னே யிதற்கினியிங்
கென்னே யென்னே பகர்வேனே. (அ)

2429 புனமஞ் ஞையெனத் தகுசாயற்
பொன்னங் கொடியா மிதிலையினுட்
சனகன் புதல்வி தனைமணந்த
தண்ணென் பசுந்தண் டுளவணிந்த
வனகன் றிறமு மவடிறத்தன்
றங்கு நிகழ்ந்த திதுவென்று
லெனதன் புறவிங் கிதற்கினியா
னென்னே யென்னே பகர்வேனே. (கூ)

2430 என்று னெழுந்தான் கமலையைச்சென்
றெதிர்ந்தான் றிரையு ளிருந்தானங்
குன்று விளக்கைக் கொணர்கவெனக்
கொணர்வார் கொணர்போழ் தருகிருத்தி
யன்று தரித்த நல்வினையீங்
களித்த மருக னுரைத்ததனைப்
பொன்று துரைத்தான் கமலையுந்தன்
பூமான் மொழிந்த படிமொழிந்தாள். (க0)

2431 தழங்குந் திரைப்பாற் கடல்பயந்த
தனித்தெள் ளமிர்தை மலர்மகள்கோன்
வழங்கும் படிகைக் கொளவரங்கூர்
வானோ ரருந்தும் படியல்லான்
முழங்குந் திருப்பாற் கடலருந்து
முறைகண் டிலங்காந் தரைப்பிரிந்தாற்
பழங்கண் பயின்மங் கையர்களுமப்
படிக்கொத் தவராம் பயந்தவர்க்கே. (கக)

2432 நெருங்கித் தரங்கந் திரைத்தெழுமுன்
னீர்மொண் டெழுந்த புயனெடுவான்
மருங்குற் றருகுதண் டுளிதனினம்
மாரி யுறுமூ தியமின்று
யொருங்கிப் புவனத் துயிர்க் குறுமூ
தியமென் பதுமுற் றுணர்ந்தனமா
விருங்கற் புடைநன் மடந்தையரு
மீன்றார் தமக்கந் நிலைமையரே. (கஉ)

2433 பொற்று மரையைப் பயந்ததடம்
புனைந்த திலபூண் டிலமணியைப்
பெற்று தரித்த வலம்புரிபூண்
பெற்றி யினர்க்கே யுரித்ததுபோன்
முற்று முலைமங் கையர்தமக்கு
முறையீங் கிதென வுலகியலை
யுற்று ரணங்கி னெடுமணங்கை
யுடன்கொண் டெழுதற் குடன்பட்டார். (கங)

வேறு.

2434 சிறைப்புறத் துரைத்தமாற்றந்தெற்றெனவுணர்ந்துளாற்குப்
புறத்துவந் துணர்த்தி யைய பொன்மனைப் புகுதி யென்று
னறத்துறை முழுதுந் தோய்ந்த வமலனுங் கமலம் போல
நிறத்தசெம் முகத்தி னோங்கு நேரிழை மனைபுக் கானே. ()

2435 மைக்கருங் கயற்கட் செவ்வாய் மடந்தையை யுரவோன் கொண்டு
புக்ககத் தேக லுற்ற பொன்னக ரதனுண் மின்னார்
அக்கணத் தில்லி னெய்தி யவளைமெய் யிறுகப் புல்லித்
தக்கதென் றாலும் பூண்டு தழீஇயகை நெகிழ்க்கி லாரே. ()

2436 மடந்தையு மாத ரோடும் வைகலுந் துவரை யூட்டிக்
குடைந்ததண் சுனையை மென்பூக் கொய்தபைந் தடத்தை விண்மேற்
படர்ந்ததேம்பொழிலைநோக்கிப்பாளைமென்கமுகினும்பர்த்
தொடர்ந்தவூ சலையு முள்ளந் துணுக்குற நோக்கி மாதோ. ()

வேறு.

2437 நற்றாய் தளிர்மெல் லடிவணங்கி நற்றாயினுமே தகவளர்த்த
சொற்றா யரையுந் தழுவியபின் றுளங்கு பசும்பொன் வளங்கெழுசீ
ரிற்பாற் பிறந்த மகளிரையு மெதிர்கொண் டிறுகத் தழுவினண்மாண்
கற்பாற் சிறந்த மடந்தையர்க்குத் திலக மெனவாழ் கயற்கண்ணாள்.

இரண்டும் தொடர்.

வேறு.

2438 இன்னண நிகழ்ந்த காலைத் தாதையு மியக்கர் வேந்தன்
பொன்னறைநிகர்த்ததாந்தன்பொன்னறைதிறமினென்ன
மன்மரு மகற்குஞ் செய்ய மகட்கும்வா ளரவ மீன்ற
பன்பணி குயின்ற வொண்பொற் பலகலன் பூட்டி மாதோ.

2439 பொன்னிணைக்குழைத்துவல்லான்பொறித்தவெண்டுகில்கள்செம்பட்
டின்னதென் றளவை யின்றா யீந்தன னாக நாகப்
பன்மணி குயின்ற வாரம் பற்பல முத்த மாலை
பின்னருமொருநூறொண்பொற்பெட்டகநிறைத்துமீந்தான்.

இரண்டும் தொடர்.

2440 அங்கவன் மருகன் றாதை யவைக்களங் குறுகுங் காலை
யிங்கினி திருக்க வென்றா னிருந்தன னாகிச் சோதி
பொங்கொளி மணிசே ராரம் பொலந்துகில் பலவு மீந்தான்
றங்கிய தமர்க்கும் வேறு தமிதமி புரந்தான் மன்னோ. (உ0)

வேறு.

2441 இளங்கதிரோ னுதயகிரிச் சிந்தூர
வருவியினி லீரெண் ணுன்கென்
றுளங்கொளுகந் தொறும்விளைந்த வருமணிநா
யகத்தமைத்த வொண்பொன் னூரந்
துளங்குபொலன் றுகில்குழலுட் டுன்னினநங்
கையைப் பயந்த தூய தாதை
வளம்பெறவுந் தவன்றமர்க்குங் காரியைப்பெற்
றவனுவந்து மகிழ்ப்பி னீங்கான். (உக)

2442 இன்னணந்தா னிருநிதியம் புரந்ததற்பி
னினியெழுக வென்ற காலைப்
பொன்னசல மெனப்பணைத்த புணர்முலையின்
காரியெனும் புயலை யீன்ற
வன்னநடைத் துடியிடைபொற் சிவிகையின்பின்
சிவிகைதனி லன்புற் றேகக்
கன்னன்மொழிக் குவளைவிழிச் சிலதியரெண்
ணிறந்தவரெங் கணுஞ்சூழ்ந் தாரே. (உஉ)

வேறு.

2443 தவளப் பிறைக்கிம் புரிக்கோட்டுச்
சயிலப் பிடர்நித் திலக்குடையும்
பவளக் குடையும் புடைநிழற்றப்
பரவைத் திரைப்பார் நங்கையெனும்
அவளத் தனுந்தற் பயந்தவனு
மன்புற் றிருபாங் கருங்கரடக்
கவளக் களிற்றின் பிடர்வரச்சென்
றனன்கா ரியுமன் களிதகவே. (உங)

2444 எவற் றெழில்செய் மடந்தையர்கொண்
டெழுகென் றெழின்மா மணிக்கூட்டிற்
காவற் றெழில்செய் மழலையனக்
கவின்பிள் ளையுங்கிள் ளையுமதனைக்

கூவற் றெழில்கூர் குயிற்பேடுங்
குடுமிச் சிறகர் மயிற்பேடுந்
தீவிற் புறவும் பன்னிறப்பைங்
கிளியுங் கொடுத்தார் திருவன்னூர். (உச)

2445 பணிப்பெட் டகமைம் பதிற்றிரட்டி
பகர்வோ ருடன்கொள் ளுநரும்விலை
கணித்தற் கரிதா மருமணிபெய்
கவின்பெட் டகத்தி னுடனாவோர்
தணித்தற் கரிதாஞ் சினவடவைத்
தழல்பொங் கிருகட் கரிப்பிடிற்
பிணித்தற் குரித்தாம் புணர்ப்பொறையிற்
பின்முன் புறச்சென் றனமன்னே. (உரு)

வேறு.

2446 நால்வகைத் தானை முன்னுறப் பின்னு
நயந்திடை விராயெழ விருபா
னூல்வகை தெரிந்த நுண்ணறி வடைந்து
நோற்றகோன் பமைந்தவே தியர்வான்
மேல்விரி யுடுவின் கணமெனத் தாள
மிளிர்குடை நிழற்சிவி கையின்மேற்
சால்புற விருந்து விளம்புமா சியொடுந்
தழங்குவ தனித்தனி முரசம். (உசு)

2447 தென்கட லிரைப்பி தென்குவர் வடபாற்
செறிந்துளார் தென்னரும் வடபான்
மன்கட லிரைப்பி தென்குவர் குடபான்
மன்னினர் குணதிசை மரீஇய
நன்கட லிரைப்பி தென்குவர் குணபா
னண்ணினர் மேற்றிசை மரீஇய
கொன்கட லிரைப்பி தென்குவர் குளிறுங்
குடமுழா வொலியினைக் குறித்தே. (உஎ)

2448 காடைதா னிடம்பெற் றெழுகலும் வலியான்
கணம்வலம் படர்ந்திடம் பிரியா
வோடைமால் வரையூர்ந் தெழுமரு மான்முன்
பொளிர்மணிச் சிவிகையூர்ந் தெகினப்
பேடையாம் புதல்வி படர்தனற் றாயும்
பிறங்குபொன் னகருண்மா தரைப்போன்
மேடைமே லிவர்ந்து காமர்செங் குவளை
விழியிணை களிக்கநோக் குறுமே. (உஅ)

2449 அம்மனை யுடன்பந் தவிர்மணி கழங்கென்
பவைகொடு பாங்கரே குநரோ
டெம்மனை யெவனென் றேந்துபொற் கூட்டி
லேகுபைங் கிளிவின வுதலுந்
தம்மனை யுடனே சிவிகையைப் பொதிந்த
தானையு ளிருந்தபைங் கிளிதா
னும்மனை யீதிங் கிருந்தன ளெனவே
நடங்குறுண் ணிடைநகு தருமே. (உகூ)

2450 தீவினுட் கிளிபோற் சிவிகையு ளிருப்பச்
சிறுகிளி சிலம்பினன் கடியார்
காவினத் தகத்த வெனும்பெய ரமக்குங்
கடத்தினள் கடத்தின வெனும்பேர்
பூவினு னுமக்கும் புறத்தன வெனும்பேர்
புனைந்தன ளெனப்புற விறெடுங்
கூவினன் சிவிகை யகத்தவா யாய்கைக்
கொழுங்கனி செறிந்தருந் தினவே. (௩0)

2451 அன்னையொ டகத்தங் கிருந்தபார்ப் பினத்து
ளன்னையைப் பயந்துளாள் பெயர்சார்
நன்னயக் கிளிக ளன்னையே வலின்பின்
னயந்தமூ வருளிரு வரையு
மன்னையுஞ் சிரத்தின் வணங்குது மெனவே
வடித்தபின் னையரே நமது
பொன்னகர் புகுந்தாற் கமலையைத் தொழுது
போற்றலும் புகலுநீ ரெனுமே. (௩க)

2452 காரியைப் பயந்த கவினுடைத் தாதை
காரிகை தனைப்பெறுங் கருணை
வாரியை முகமன் பலபல புகன்று
மன்னுயி ரெனுமனை வியொடுஞ்
சீரிய நகர்க்கண் டமருட னிருத்தி
சிறந்தவை கலுமெனத் திரும்பி
யாரியர் துவன்ற தன்னக ரடைந்தா
னவனுமப் பொழிற்புறத் தடைந்தான். (௩௨)

2453 தளித்தெழு தரங்கப் பாற்கடல் கடைந்து
தமனியத் திருமகள் கொழுநன்
அளித்ததெள் ளமுத நங்கையா யினதென்
றவனயி ராவதப் பிடர்மேற்
களித்தெழு புனித னெனக்கரத் தினில்வண்
கவிகையிற் கரந்துறை தருத்தேன்
றுளித்ததண் பொழிலாய் முன்பமைந் ததெனத்
தோன்றுபூஞ் சோலையுட் புகுந்தான். (௩௩)

2454 செல்வனுந் திருவும் படர்பொழி லிடத்துச்
செழுந்துணர்க் கொன்றையைத் தழுவி
முல்லையங் கொடிநன் முகையொடுஞ் சுரும்புண்
முருகவிழ் மலரொடு மெதிர்தல்
ஒல்லையுந் தணவா தணியொடும் புதல்வ
ரொடுமினி யனவிர வலர்க்குத்
தில்லறத் தினில்வாழ்ந் திருப்பிரென் றுறுநர்க்
கெதிர்குறி காட்டுதல் பொருவும். (௩௪)

2455 கதிர்நுழைந் தறியாப் பொதும்பருள் புக்க
காலையிற் றரளவெண் கவிகை
மதிநிழற் கரட மதக்களிற் றெருத்தின்
மண்மிசைப் புரந்தர னெனவாழ்
சதிரினன் றனைக்கண் டுயிர்தளிர்த் தனமித்
தகையர்யார் காண்பதற் கினியென்
றதிர்திரைப் பரவைக் குடகடல் விழுந்தா
னுயிரக் கதிர்விரித் தெழுந்தான். (௩௫)

2456 பகற்கதிர் சுருக்கி மறைதலு மிடையிற்
படரிரு ளிரிதரா விசும்பின்
முகத்தெழு மதிய மயலிரி தராது
முறிபடும் பொதும்பரி னுழைந்துள்
புகத்தவழ் பொழுதி னுரிஞ்சியே யுக்க
புத்தமு தவன்மர பினராய்
அகத்தடைந் தவர்தாம் பகற்கடங் கடந்துண்
டாயநோய் துடைப்பதும் பொருவும். (௩௬)

2457 தடந்தொறும் படிந்து மணிவிளக் கமைத்த
தானைசூழ் குரம்பையு ளதன்பின்
படர்ந்தமு தயின்றும் வெள்ளிலை யினெடும்
பஞ்சவா சமுங்கவு ளிடைக்கொண்
டிடந்தொறும் பாட லாடல்கேட் டிருந்து
மிணைவிழி களித்து நள்ளிரவி
னடர்ந்தபூந் தவிசி னுடனுயி ரெனவே
யணைந்தனை வருந்துயி லமர்ந்தார். (௩௭)

2458 அற்றைநா ளதன்க ணனைவருங் கங்குற்
கமைந்தபின் கதிர்வரு காலை
மற்றைநாட் கலினத் துரகதத் தடந்தேர்
மதமலை சிவிகையூர்ந் தனராய்ச்
சுற்றமோ டெழுந்து வளமலி பொருநைத்
துறைதொறும் பொழிலகத் தடைந்த
துற்றதூ துவர்சென் றகனகர் பிரியா
துறைந்தவுத் தமத்தமர்க் குரைத்தார். (௩௮)

2459 மாடமா ளிகையின் வயின்வயின் வரம்பின்
மணிவிளக் கமைத்ததற் பின்ன
ராடகப் பசும்பொற் பூரண குடங்க
ளகனகர் வாயிலி னமைத்தும்
ஏடவி ழரம்பை பாளைமென் கமுகோ
டெண்ணிலா தனநிரை நிறைத்தும்
பாடலொ டாடல் பயின்றிடு முழக்கம்
பாற்கட லெனத்தழங் கினவே. (௩௯).

2460 வலம்புரி முழங்க வலம்புரி தனையே
வளைத்திடு மிடம்புரிந் தனவாங்
குலம்புரிந் துலப்பி லாதன முழங்கக்
கூறிய வகைவளைத் திடவாழ்
நலம்புரிந் துறைவெண் சலஞ்சலம் பலவு
நானிலந் தனைவளைத் தூராய
சலம்புரிந் திரைப்ப தெனவிரைப் பவற்றிற்
றமிதமி முழங்குமும் முரசே. (௪௦)

2461 மகரதோ ரணமு நிழன்மணித் தேரும்
வடகரைப் பொருநையந் துறைநின்
றகனக ரதன்கண் மறுகுதோ றமைத்து
மாடகப் பூந்துகில் விரித்து
நிகரிலா மலர்பெய் தவிசமைத் ததற்பின்
னிழன்மணிச் சிவிகைநின் றிழிந்து
தகரமென் குழலா ணிழலெனத் தனது
தலைவனைத் தொடர்ந்தெழுந் தனளே. (௪௧)

2462 மலகரி வசந்த னிந்தள முகாரி
மாளவி வராடிபூ வாளி
குலவரி யளிகண் முரலவே நறவங்
கொப்புளித் திடுமண மலர்கள்
இலவிதழ் மடவா ரிருகையி னிறைப்ப
விலகுநித் திலக்குடை நிழற்கீழ்
நிலவுபோன் றசைவெண் சாமரை வீச
நிமலனைத் தொடர்ந்தெழுந் தனளே. (௪௨)

வேறு.

2463 உடன்கொண் டெழுபோழ் தனநடைகண்
டொருங்கு தொடர வுபயவிழிக்
கடன்கண் டளிசெங் குவளையெனக்
களிப்பிற் றொடர வளர்சாயற்
றிடன்கண் டணிமா மயில்தொடரத்
தேமென் மொழிகேட் டிருஞ்சினையி
னிடன்கொண் டுறுபைங் கிளிதொடர
விறைபின் றொடர்ந்தா ளிறைமகளே. (௪௩)

2464 நெறிக்குங் கருமென் கமழ்குழலா
நிழன்மே கமுங்குங் குமக்குழம்பு
பொறிக்கும் புளகப் புணர்முலையாம்
பொன்மே ருவுஞ்சிற் றிடையினையே
முறிக்கு முறிந்தாற் சேமவிடை
முனங்கண் டவரின் றெனவிருதாள்
செறிக்குங் கனகச் சிலம்பிரங்கத்
திருமா ளிகைவா யிலினடைந்தாள். (சச)

2465 வணங்கி மதிநன் னுதலியர்தாம்
வாழ்வே வருக வெனவெதிர்கொண்
டணங்கு செயுமெல் லடியிணையே
யவிர்தண் பனிநீர் கொடுகழுவச்
சுணங்கு பரந்த விளமுலைப்பொற்
றொடியுந் தொடைமார் பனுங்களிவண்
டிணங்கு நறுமென் மலரணைசேர்ந்
திருந்தா ரிருகண் விருந்தாயே. (சரு)

2466 நன்மாண் பனுவற் றுறையுணர்ந்த
ஞான சிரியர் தமைவணங்கிப்
பன்மாண் புடைநற் றமர்க்கினிய
பகர்ந்து பரிவா ரத்தவரைத்
தன்மாண் புறநோக் குபுபணித்துத்
தணவாத் தமரி னெடுந்தனது
பொன்மா ளிகையுட் புகுந்தனனற்
புதல்வற் பயந்த புரவலனே. (சசா)

வேறு.

2467 புனைமலர்த் தெரிய லான்றன் பொன்மனை புகுந்த பின்னர்
அனைவரு மகிழ்த மாந்தி யன்புறக் களிக்கு நாளி
னனைமலர்க் குழலி னளா நங்கையை நயந்து வேறாய்
மனையறம் படுத்த வாழ்ந்த வாழ்வினிப் பகர்த லுற்றேன்.()

இருபத்துநான்காவது: மீட்சிச்சருக்கம் முற்றும்.

---

## உரு. இல்வாழ்க்கைச்சருக்கம்.

2468 பைம்பொன் னாட்டவர் நாகநா டதனுளாய்ப் பதிந்தார்க
டம்பொன் னாட்டினு மிதற்கிணை யிலையெனுந் தகைத்தாக
நம்பொன்மாளிகையினுந்திருத்தகைத்தெனநங்கைக்கோர்
செம்பொன்மாளிகையியற்றுமினென்றனன்றிருத்தக்கான்.

2469 மயனும் வாசவற் கமைந்ததச் சனுமதிப் பவற்றோடு
மயனும் யாரிது போலமைப் பவரெனு மமைவிற்றாய்
முயனி லாயவெண் மதியக டுழுமணி முகடோங்க
வியனி லாயநீ ளிடையுற வமைத்தனர் மிளிர்மாடம். (உ)

2470 மாழை மால்வரை யொன்றினை மாடமாக் கியதென்றே
யேழைமானிடரிமைத்தகண்குறிப்பதோடிமைப்பென்னுங்
கோழை தீர்ந்தகண் ணமரர்கட் புலங்கொடு கூர்ந்தாலும்
பீழை செய்தஃ தேயெனக் குறிப்பதாம் பெற்றித்தே. (ந)

2471 ஒற்றை யண்டம தொருபதி னுலக குடனைங்கப்
பெற்ற துட்கொளப் படியெடுப் பாய்நிலம் பெறுவாழ்விற்
கற்ற கம்மிய ரமைத்ததை யினியொரு கவின்மாடந்
தெற்றெனப்புணர்ப்பவர்க்கிலக்கணமெனுஞ்செகமன்னே.

2472 பிறந்த மானகர் செம்பொன்மா ளிகையினைப் பெருமானிற்
சிறந்து வாழ்பவள் கண்களி தரத்தினந் தெரிசிப்பான்
அறந்த வாதமா துலனமைத் தனனென வகல்வானிற்
றுறந்து ளாரொடு முரைத்திமை யவர்களுந் துதிசெய்வார்.

2473 தன்ன தேகரப் பவனுழைப் பசியடத் தளர்கின்றீ
ரன்ன நன்கரு ணையினறு நெய்யளா யதனோடுங்
கன்னன் முக்கனி பாலளா யருந்தவை கலும்வம்மி
னென்னவேபொறித்தாடு நுண்டுகிற்கொடியெண்ணின்றே.

வேறு.

2474 கனகவான் றிகிரி வரையென வளைத்த
கனகமா மதிணிலை யகத்தாய்
வனசரோ ருகப்பூ மடந்தையுங் கருணை
மாயனு மகிழ்ந்துவீற் றிருக்குந்

தினகர மொருபாங் கரிஞெரு பாங்கர்த்
திருமடைப் பள்ளியா துலர்பா
லனவர தமுநெஞ் சுவந்துவந் தளித்தற்
கமைத்தநீ ணிதியறை யொருபால். (எ)

2475 முதுமொழிப் புலவ ருடன்கலை பயிலு
முதன்மைசார் மண்டப மொருசார்
புதுமைசால் விருந்தோ டமைந்தமிர் தருந்தப்
புனைமணி மண்டப மொருசார்
மதுமலர் புனைந்து களபம தணியும்
வசந்தமா மண்டப மொருசார்
நொதுமலர் குறுகாச் சயனம தமைத்த
நோக்கமர் மண்டப மொருசார். (அ)

2476 ஐந்தரு நிழற்கீ ழமரரும் வியப்பா
னமைத்ததோர் வசந்தமண் டபத்துட்
சுந்தரப் பசும்பொற் கேவண மமைத்த
சுடர்விடு சந்திர காந்தஞ்
சந்திர கிரணங் கதுவலுந் தெண்ணீர்
தளிப்பத ஞெடுந்தமிழ் மலய
மந்தமா ருதஞ்சண் பகந்தளீ யவிழ்தேன்
வாங்கிமொண் டெறிதரு மொருசார். (கூ)

2477 வலம்புரி யெனச்செய் புழைவழி பொருநை
வருபுதுப் புனனிலா முன்றிற்
றலம்படர்ந் தவணின் றுடுதற் கமைத்த
தண்புன லும்பர்நின் றிம்பர்
நிலம்படர்ந் தியற்று புழுகுதண் சுனையு
ணிரம்புத னெடியமே ருவின்மேற்
புலம்படர் மந்தா கினியரு வியதாய்ப்
புணரியுட் புகுதரல் பொருவும். (க0)

2478 கையகத் திறையா யிரங்கொள வகல்பொற்
களஞ்சியந் தொறும்பரி மளிக்குந்
துய்யபன் னிறநெற் குவைமுக வையினுற்
றுகைகுறித் திடவரி யனவாய்
வையக நெளியப் புறமதி ளகத்தாய்
வரம்பிலா தனநிறைத் ததற்பின்
னெய்பய றமுந்து கன்னல்பெய் குடத்தி
னிறைத்தசா லையும்வரம் பிலவே. (கக)

2479 ஒண்பொன்னு லமைத்த பரிகல வகையோ
டுவவினுண் மதியெனத் தயங்கும்
வெண்பொன்னுற் புதுவ தெனவமைத் தனவும்
விளம்பிலெண் ணிறந்தன வவற்றுற்
பண்பினு லடுதற் றொழிற்கமை குமுதம்
பரந்தகொப் பரைதசும் பிடங்கர்
கண்கொளா தமைத்த திவையலா தேவெண்
கலமுத லியவவ ணிலவே. (கஉ)

2480 பொலன்செய்வன் றொடரை வச்சிரத் துலாத்திற்
பூட்டிமெல் லணைபல வடுக்கி
நிலந்தொறும் புணர்த்த தூங்குமஞ் சத்தி
னீடிரு மருங்குமான் மதத்தைக்
கலந்தமட் குழம்பிற் றுழிவாய்ப் புனலுட்
காவியு நெய்தலுங் கஞுவி
மலர்ந்தகா லையின்மென் பெடையொடு சுரும்பு
மணந்துதா தளைவனப் பினவே. (கங)

2481 கதிர்விரி பசும்பொன் னிலையின்மா ணிக்கக்
கதவமே கொளுத்தும்வா யிலின்கண்
ணெதிரெதிர் பசும்பொற் சுடர்விரிப் பனவா
மேங்தெழின் மரகத மணியாற்
சதிர்பெறக் கமுகும் வாழையு மியற்றித்
தண்ணிலா விரிவரி வளையு
முதிர்குரன் முரச மூன்றுநின் றதிர
முழங்குவ மும்மதக் களிறே. (கச)